இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 18 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 10 – ஞாயிற்றுக்கிழமை 27 ஆகஸ்ட் 2023 – வெளியூர் 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 18: Thiruvalluvar Year - 2054 - Aavani 10 - Sunday 27 August 2023 - Dak 16+8 Pages ₹ 5.00

## வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க

# வேளாண் திட்டங்களில் சிறப்பு கவனம் தேவை!

## “நாம் என்றும் மக்கள் ஊழியர்களே!” நாகை ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு துறைச் செயலாளர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நாகை, ஆக.27-**

**“வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க வேளாண் திட்டங்களில் சிறப்பு கவனம் தேவை” என்றும் “நாம் என்றும் மக்கள் ஊழியர்களே!” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நானும் இதே டெல்டா மாவட்டத்துக்காரன்தான். அந்த வகையில், தமிழ்நாட்டு முதலமைச்சராக மட்டுமில்லை, இந்த டெல்டா மாவட்டத்தின் பிரதிநிதி என்கின்ற உணர்வோடும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளேன்.

**டெல்டா மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள்!**

இந்த மாவட்டங்கள் பொதுவாகவே வேளாண்மை சார்ந்த மாவட்டங்கள். அதனால்தான், வரலாற்றுக்காலம் தொட்டு “தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம்” என்ற சிறப்பை இந்தப் பகுதி பெற்றிருக்கிறது. இந்த மாவட்டங்களுடைய வளர்ச்சி என்பது வேளாண்மை சேர்த்து மற்ற ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைந்தாக வேண்டும். நாம் வளர்த்தாக வேண்டும். அத்தகைய வளர்ச்சிக்காக நமது அரசு இந்த மாவட்டங்களில் தொழில், வர்த்தகம் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதின் அவசியத்தை உணர்ந்து பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

> **“இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னால், நிலுவையில் இருக்கின்ற சாலைப் பணிகளை முடித்து, மக்களுடைய இன்னல்களைப் போக்கவேண்டும். எனவே, ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் எல்லா பணிகளையும் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.”**

நான் அடிக்கடி குறிப்பிடுவது போல், எந்த ஒரு திட்டமும் அதனுடைய நோக்கத்தை அடைய, தொடர்ச்சியான ஆய்வுகள் அவசியம். அந்த அடிப்படையில்தான், மக்களுக்கு நெருக்கமாகச் சென்று, திட்டங்களுடைய செயலாக்கத்தை கண்காணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, “கள ஆய்வில் முதலமைச்சர்”என்ற இந்தத் திட்டத்தை கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கினேன்.

அரசினுடைய திட்டங்களின் செயலாக்கத்தைச் சந்திக்கக் கூடிய சவால்கள் மற்றும் அது தொடர்பாக, நீங்கள் தரக் கூடிய ஆலோசனைகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்கின்ற நோக்கத்தில்தான், மாவட்ட அளவில் இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுவாகவே, முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் துறைச் செயலாளர்களிடம்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## பெங்களூரு – கேரளா விமான கட்டணம் பல மடங்கு உயர்வு!

*பெங்களூரு, ஆக. 27 -*

*ஓணம் பண்டிகையையொட்டி சொந்த ஊருக்குச் செல்லும் பயணிகள் கூட்டம் அதிகரித்து உள்ளதால் பெங்களூரு - கேரளா இடையே விமான கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது.*

*ஓணம் பண்டிகை வருகிற 29ந் தேதி (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இதனால் பெங்களூரு மற்றும் அதை சுற்றி உள்ள மாவட்டங்களில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள் தங்கள் சொந்த ஊரில் குடும்பத்துடன் ஓணம் பண்டிகையை கொண்டாட கேரளாவுக்கு புறப்பட்டு செல்கிறார்கள்.*

## நிலவைத் தொடர்ந்து சூரியன்!

# செப்.2ல் ஆதித்யா விண்கலத்தை செலுத்துகிறது இஸ்ரோ!

ஸ்ரீஹரிகோட்டா, ஆக. 27 –

ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டு உள்ளது.

இஸ்ரோவின் நிலவுத் திட்டமான சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வுப் பணியை தொடங்கி உள்ளது.

இதையடுத்து அடுத்த கனவுத் திட்டமான சூரிய திட்டத்தை செயல்படுத்தும் பணியில் இஸ்ரோ முழு வீச்சில் ஈடுபட்டுள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆதித்யா எல்1 விண்கலத்தை செப்டம்பர் 2ஆம் தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக அகமதாபாத்தில் உள்ள விண்வெளி பயன்பாட்டு மைய இயக்குனர் நிலேஷ் எம்.தேசாய் கூறுகையில்,

ஆதித்யாஎல்1 தயார் நிலையில் உள்ளதாகவும், செப்டம்பர் 2ம் தேதி விண்ணில் ஏவ வாய்ப்பு உள்ளது என்றும் கூறினார்.

ஆதித்யா விண்கலத்தின் முதல்கட்ட சோதனைகள் கடந்த 2020ம் ஆண்டே நடத்தி முடிக்கப்பட்டது. இந்த விண்கலம், ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த விண்கலம் 1,475 கிலோ எடை கொண்டது. பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீட்டர் தூரம் கொண்ட சூரியனின் லெக்ராஞ்சியன் புள்ளி 1ல் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இந்த விண்கலம் மூலம் சூரிய புயல்கள், பூமியில் ஏற்படும் மாற்றங்கள், ஒளிக்கோளம் மற்றும் குரோமோஸ்பியர் ஆகியவற்றை ஆய்வு செய்து பூமிக்கு தகவல்களை பெற முடியும்.



## தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு



## தி.மு.க. இளைஞர் அணி

## இரண்டாவது மாநில மாநாடு!

**தலைமைக் கழகம் அறிவிப்பு**

**2007ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று கழக வரலாற்றில் முத்திரைப் பதித்து, திருப்புமுனை ஏற்படுத்திய தி.மு.க. இளைஞர் அணி முதல் மாநில மாநாட்டினை தொடர்ந்து,**

**வருகிற 17–12–2023 ஞாயிற்றுக்கிழமை அன்று “தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு” சேலத்தில் நடைபெறும்.**

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை–18.**
**நாள் 26–8–2023.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

## சேலம் மாநாட்டை ஒரு சிறந்த மாநாடாக நடத்திட

# இளைஞர் அணியினர் குடும்பத்தோடு திரண்டு வாரீர்!

## திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!



**திருவாரூர், ஆக.27-**

**“சேலத்தில் நடைபெறும் கொள்கை மாநாட்டிற்கு இளைஞர் அணியினர் குடும்பத்தோடு திரண்டு வாரீர்” என்று கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாடு வரும் டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெற உள்ள நிலையில், இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வருவாய் மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் செய்து மாநாட்டுக்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி வருகிறார்.

திருவாரூர் கலைஞர் கோட்டம் அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“இந்த நேரத்திலே கழகத்தினருக்கு, இளைஞர் அணியினருக்கு என்னுடைய ஓர் அன்பு வேண்டுகோள். நான் கலந்து கொள்கின்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், பட்டாசு வெடிப்பதை தயவு செய்து தவிர்த்துவிட வேண்டும் என்று பலமுறை கூறியிருக்கின்றேன்.

இருந்தாலும் ஆர்வ மிகுதியால் பட்டாசு வெடிக்கிறீர்கள். அதனால், யாருக்கும் எந்தப் பயனும் கிடையாது. தயவுசெய்து இந்தப் பட்டாசு வெடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். இந்த நிகழ்ச்சியை நிறையக் கட்சிக்காரர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள், கழக நிர்வாகிகள் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். கேட்டுக்கொண்டு இருப்பார்கள்.

**இங்கே நீட் தேர்வை ஒழிக்கிறதுக்கு இந்த ஒரு உதயநிதி பத்தாது. இங்க வந்திருக்கக்கூடிய நீங்க அத்தனை பேரும் உதயநிதியா மாறி போராட்டக் களத்துக்கு வரணும். இது என்னுடைய தனிப்பட்ட விஷயங்களுக்காக நடத்துகின்ற போராட்டம் கிடையாது. மாணவர்களுடைய கல்வி உரிமைக்காக மக்களுக்காக நடத்துற போராட்டம். எப்படி இந்தி திணிப்பிற்குத் தலைவர் கலைஞர் போராட்டத்தில் இறங்கினாரோ, எப்படி எமர்ஜென்சி காலத்துல மிசா காலத்துல நம்முடைய தலைவர் அவர்கள் களத்தில் இறங்கினாரோ, அதே மாதிரி இந்த நீட் தேர்வு ரத்து செய்வதற்காக நடைபெறும் போராட்டத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்குவதற்குத் தயாராக இருக்கணும்.**

### பட்டாசு வெடிப்பதை நிறுத்துங்கள்!

அடுத்த ஐந்து நாட்கள் இந்த டெல்டா பகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செல்கின்றேன். தயவு செய்து பட்டாசு வெடிப்பதை, பொன்னாடை போர்த்துவதை, பூங்கொத்து கொடுப்பதைத் தவிர்த்துவிட்டு, மாநாட்டுக்கு நிதி அளியுங்கள்.

நூறு ரூபாய், 200 ரூபாய் என்றாலும் கூடப் பரவாயில்லை. இதை நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். மீண்டும் திருவாரூர் மாவட்டத்திலே சொல்வதை நான் என்னுடைய கடமையாக நினைக்கின்றேன்.

அதே நேரத்தில் நன்றி கூறிக் கொள்கின்றேன். மாவட்டக் கழகத்தின் சார்பாக அண்ணன் கலைவாணன் அவர்கள் 15 இலட்சம் ரூபாய் மாநாட்டு நிதியாக அளித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றி. அதேபோல் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் 5 லட்சம் ரூபாய் நிதி அளித்து இருக்கிறார்கள். அதற்கும் நன்றி.

### மாநாட்டுக்கு நிதி!

இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாட்டுக்காக மாவட்ட வாரியான செயல்வீரர்கள் கூட்டம், ஒரு வாரத்துக்கு முன்பு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்தான் முதன்முதலில் துவங்கியது. அங்கே மாநாட்டு நிதியாக ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

சிறிது நேரத்துக்கு முன்பு தஞ்சாவூர் வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணியினருக்கான செயல்வீரர்கள் கூட்டம் தஞ்சாவூரிலே நடந்தது. அங்கு 50 இலட்சம் ரூபாய் மாநாட்டு நிதியாக அளித்து இருக்கிறார்கள்.

நான் 15 லட்சம் ரூபாயைக் குறைவாக சொல்லவில்லை. எனக்குத் தெரியும் மற்ற மாவட்டங்களை விட, நீங்கள் தான் அதிக உணர்வோடு மாநாட்டுக்கு வந்து, அந்த மாநாட்டைச் சிறப்பிக்கப் போகிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இரண்டாம் கட்டமாகக் கொடுத்தால், நான் வாங்க மறுக்க மாட்டேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### இளைஞர் அணி சார்பாக முதல்வருக்கு வாழ்த்து!

முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டில் இளைஞர் அணியினுடைய இந்த இரண்டாவது மாநில மாநாட்டை சேலத்தில் நடத்துகின்ற வாய்ப்பை கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு வழங்கி இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் இளைஞர் அணி சார்பாக, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வோம்.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளுக்காக, செயல்வீரர் கூட்டங்களை முதல் கட்டமாக பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த வாரம் நடத்தி முடித்தோம். அதன் பிறகு, இன்றைக்கு, மாலை தஞ்சையிலே செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டு, தற்பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில், இந்த இளைஞர் அணி கூட்டம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### உலகம் பாராட்டும் காலை சிற்றுண்டி திட்டம்!

இன்று ஆகஸ்ட் 25 ஆம் தேதி வரலாற்றில் மிக மிக முக்கியமான ஒரு நாள். 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 தேதிகளில் இதே திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் மண்ணில் நீதிக்கட்சி மாநாட்டில், தந்தை பெரியார் அவர்கள் நீதிக் கட்சியினுடைய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டது இதே ஆகஸ்ட் 25ஆம் தேதிதான். இதே ஆகஸ்ட் 25ல் இன்னொரு முக்கியமான வரலாற்று நிகழ்வு ஆகஸ்ட் 25. இந்தியாவிலேயே முதல்முறையாக, இந்தியாவுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக, ஒட்டுமொத்த உலகமும் பாராட்டக்கூடிய திட்டமாக ‘முதலமைச்சருடைய காலை சிற்றுண்டித் திட்டம்’ இன்று காலை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 17 லட்சம் மாணவர்கள், இன்று முதல் காலை உணவை பள்ளிக்கூடம் வந்து சாப்பிட உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் கலைஞர் பிறந்த திருக்குவளையில் தொடங்கி வைத்திருக்கிறார்கள். நான் என்னுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்துவிட்டு, மாணவர்களுடன் சாப்பிட்டுவிட்டு, வருகிறேன். இந்தத் திட்டத்தில் மாணவர்கள் எவ்வளவு பயன் அடைகிறார்களோ அதே அளவுக்கு நானும் பயன் அடைந்திருக்கிறேன்.

இத்திட்டம் முதல் கட்டமாக 1,500 பள்ளிகளில் துவங்கிவைத்தார்கள் நம் தலைவர் அவர்கள். நான் கடந்த ஒரு வருடமாகச் சிறப்புத் திட்டத்தின் செயலாக்கத்துறையினுடைய அமைச்சர் நான். மாநிலத்தின் எந்த மாவட்டத்துக்குப் போனாலும் அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், என்னுடைய காலை உணவு, அந்தப் பள்ளி மாணவர்களோடுதான் உட்கார்ந்து சாப்பிடுவேன்.

உணவின் தரம் சரியா இருக்கிறதா, சரியான நேரத்துக்கு உணவு தரப்படுகிறதா? இந்தத் திட்டத்தினால் மாணவர்களுடைய வருகைப் பதிவு அதிகரித்துள்ளதா என்று ஆய்வு செய்வேன். அதனால் சொல்கிறேன். மாணவர்கள் எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தால் பயனடைந்திருக்கிறார்களோ, நானும் அதே அளவுக்குப் பயனடைந்து இருக்கிறேன்.

இப்படி ஒரு அருமையான திட்டம். அத்தனை மாநில முதலமைச்சர்களும் பாராட்டுகிறார்கள். அத்தனை மாணவர்களும் பாராட்டுகிறார்கள். முன்பு பல குழந்தைகள் பசியோடு வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறியிருக்கிறது. இப்போது நம் மாணவர்கள் நன்றாக தெம்பாக சாப்பிட்டுவிட்டு தைரியமாகப் போய் படிக்க ஆரம்பிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தை பெற்றோர்களின் மனநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள். பல பெற்றோர் காலையில் வேலைக்குப் போறதுக்கு முன் சமயங்களில் சமைப்பதற்கு நேரம் இருக்காது. இப்போது அந்தப் பெற்றோர்கள் நம்பிக்கையோடு மாணவர்களை பள்ளிக்கு அனுப்பிவிட்டு தைரியத்தோடு வேலைக்குப் போறாங்க.

இந்த அரசு, கழக அரசு, திராவிட மாடல் அரசு என்னுடைய குழந்தையைப் பாத்துப்பாங்க. வெறும் வயிற்றோடு, பசியோடு உட்கார வைக்க மாட்டாங்க என்ற அந்த நம்பிக்கையை நம்முடைய தலைவர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில்தான் இந்த நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. நம்முடைய மாநாட்டிற்கான செயல்வீரர்கள் கூட்டம் கலைஞர் கோட்டத்தில், நம்முடைய தலைவர் அவர்கள் திறந்து வைத்த முத்தமிழறிஞர் கோட்டத்தில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் ராஜா அவர்களுக்கும், மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், மாநில துணைச் செயலாளர்கள் இளையராஜா, ஆனந்தகுமார் அவர்களுக்கும், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அத்தனை பேருக்கும் வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி.

ஏனென்றால், இரண்டு நாட்களுக்கு முன்புதான்இந்த நிகழ்ச்சியை இங்கே நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டு, இரண்டே நாட்களில் இவ்வளவு சிறப்பாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஒவ்வொருவரும் செயல்வீரர்கள்தான்.

### குடும்பத்தோடு கலந்து கொள்வீர்!

நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்ன கட்டளையிடுகிறாரோ, கட்சி என்ன சொல்கிறதோ, அதைச் செய்கிறவர்கள். செய்து முடிப்பவர்கள் தான் செயல்வீரர்கள்.

இங்கே தகவல் தொழில்நுட்ப அணியினுடைய செயலாளர் இருக்கிறார். அவர் தவறாக நினைத்துக்கொள்ள மாட்டார். நம்முடைய கழகத்தில் பல்வேறு அணிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 23 அணிகள் இருக்கின்றன.. அந்த 23 அணிகளில் தலைமை சொல்வதை முதலில் யார் செய்வது என்றால், அது இந்த இளைஞர் அணி தான். அதை அவரும் ஒப்புக் கொள்வார் என்று நினைக்கின்றேன்.

அந்தவகையில் இங்கே இருக்கக் கூடிய ஒவ்வொருவரும் செயல்வீரர் தான். அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்களும் மிகச்சிறந்த ஒரு செயல்வீரர், நம்முடைய டி.ஆர்.பி. ராஜா ஒரு மிகச் சிறந்த செயல்வீரர், இளையராஜா ஒரு செயல்வீரர். இங்கே வந்திருக்கக் கூடிய அத்தனை இளைஞர் அணி தம்பிமார்கள் ஒவ்வொருவரும் செயல்வீரர்கள். அதையெல்லாம் நிரூபிக்கக்கூடிய மாநாடு தான் சேலத்தில் டிசம்பர் மாதம் நடக்கப் போகிற அந்த மாநாடு.

மாநாட்டுக்கான தேதியை கழகத் தலைவர் அவர்கள், நாளையோ அல்லது மறுநாளோ அறிவிப்பார்கள். அந்த மாநாட்டை வெற்றி மாநாடாக ஆக்க வேண்டுமென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் அந்த மாநாட்டிற்கு வர வேண்டும். நீங்கள் மட்டும் அல்ல, இளைஞர் அணி தம்பிமார்கள் அத்தனை பேரையும் உங்கள் குடும்பத்தோடு நீங்கள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும்.

கலைஞர் அவர்கள் இந்த திருவாரூர் வீதிகளில்தான் இளைஞராகத் தன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். மாணவர் அமைப்பு, `தமிழ்நாடு மாணவர் மன்றம்’ என கலைஞரின் பொதுவாழ்வில் தொடக்கப் புள்ளியாக இருந்தது இந்தத் திருவாரூர் மண். அப்படிப்பட்ட மண்ணில் இந்தச் செயல்வீரர் கூட்டத்தை நாம் துவங்கியிருக்கின்றோம்.

### கலைஞர் மாவட்டம்!

எப்படிப் பல்வேறு அணிகளில் முதன்மையான அணி என்று நான் சொன்னேனோ, அதேபோல் நம் அணியின் இன்னொரு பெருமையை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவிலேயே முதன்முதலில் ஒரு இயக்கத்திற்கு, இளைஞர் அணி என தொடங்கியதும் திராவிட முன்னேற்ற கழகம்தான். தொடங்கியவர், நம்முடைய தலைவர் அவர்கள். தொடங்கிய ஆண்டு 1980.

திருவாரூர் மாவட்டம் என்றால் தி.மு.க, தி.மு.க என்றால் திருவாரூர் மாவட்டம் என்பது தமிழ்நாட்டுக்கே தெரியும். கலைஞர் அவர்கள் கடைசியாக இரண்டு முறை இந்தத் திருவாரூரில்தான் நின்று வென்று, சட்டமன்றத்துக்கு சென்றார். திருவாரூர் மாவட்டம் என்று கூறுவதைவிட, கலைஞர் மாவட்டம் என்று கூறலாம். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த மாவட்டம் இந்த திருவாரூர் மாவட்டம்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## கேலிக் கூத்தான அ.தி.மு.க. மாநாடு!




## காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒரே எண்ணத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி

# குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதாக உங்கள் பணி அமைய வேண்டும்!

## நாகையில் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் சட்டம், ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

நாகை, ஆக. 27-

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் காவல் துறை உயர் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒரே எண்ணத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் பணியாக உங்கள் செயல்பாடு அமைய வேண்டும் என அறிவுறுத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: –

கோட்டையில் அமர்ந்து திட்டங்களை தீட்டினால் போதும், எல்லாம் தானாக நடந்துவிடும் என்று நினைக்காமல், மக்களுக்கு நெருக்கமாக களத்துக்குச் சென்று, கண்காணிக்கவும் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

**உள்துறை ஆய்வு மிக மிக முக்கியமானது!**

மற்ற துறை ஆய்வுகளைவிட உள்துறை ஆய்வு என்பது மிக மிக முக்கியமானது. உள்துறை சரியாக இருந்தாலே அனைத்து துறைகளையும் சிறப்பாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றவன் நான். அமைதியான மாநிலத்தில்தான் அனைத்து வளர்ச்சிகளும் அமையும் என்று உங்களுக்கே தெரியும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்ததற்குப் பிறகு, ஏராளமான புதிய புதிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள், கம்பெனிகள் வந்திருக்கிறது. தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான முதல் காரணம், இந்த ஆட்சி மீதான மரியாதையும், நம்பிக்கையும் தான்!

இரண்டாவது முக்கியக் காரணம், மாநிலத்தில் நிலவும் அமைதி! கடந்த 2 ஆண்டுகளில், எந்தவொரு பெரிய சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினையும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை. அந்த அமைதியை நிலைநாட்டக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்க வேண்டும்!**

இந்த நிலை தொடர, காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒருங்கிணைந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்கவேண்டும்.

குறிப்பாக,

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்,
- கள்ளசாராயம் மற்றும் போதைப்பொருட்கள் தடுப்பு,
- கொலை மற்றும் கொள்ளை போன்றவற்றை தடுக்கவேண்டும் என்று பலமுறை நான் அறிவுறுத்தியிருக்கின்றேன்.

இதைத் தொடர்ந்து குற்றங்கள் மிக மிகக் குறைந்துகொண்டு வருகிறது. முழுமையாக குறைந்துவிட்டது என்று நான் சொல்ல மாட்டேன். அது உங்களுக்கும் தெரியும். குற்றங்கள் குறைப்பதாக இல்லாமல், குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதாக உங்கள் பணி அமையவேண்டும்.

**போதைப் பொருள் தீமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள்!**

போதை மருந்து மிகப்பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்னையாக மட்டுமில்லை, எதிர்கால வளர்ச்சிக்கும் அது தடையாக இருக்கிறது. மாணவர் மற்றும் இளைஞர்களுக்கு குட்கா, பான்மசாலா போதைப்பொருளின் தீமைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

> **தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்ததற்குப் பிறகு, ஏராளமான புதிய புதிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள், கம்பெனிகள் வந்திருக்கிறது. தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான முதல் காரணம், இந்த ஆட்சி மீதான மரியாதையும், நம்பிக்கையும் தான்!**

கடந்த 2 ஆண்டுகளாக, ஆகஸ்ட் 11 அன்றைக்கு என் தலைமையில் போதைப் பொருட்கள் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சியை நடத்தியதை நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள்.

போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இனி கஞ்சா மற்றும் போதைப் பொருள் விற்பனை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன்.

- பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை பொறுத்த வரை, பள்ளி மாணவர்களிடையே பாலியல் துன்புறுத்தல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் குற்றவாளிகளுக்கு ஃபோக்சோ சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றுதர சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்குதல் மற்றும் ஃபோக்சோ வழக்குகளை தீவிரமாக கண்காணித்து தண்டனை பெற்றுத் தரும் வரை தொடர் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

**வழக்குகளை கண்காணித்து குற்றப்பத்திரிகைக்கு உறுதி செய்க!**

- எஸ்.பி மற்றும் டி.எஸ்.பி, உங்கள் வரம்புக்குள்ளாக பதியப்படும் அனைத்து வழக்குகளையும் தொடர்ந்து கண்காணித்து, சரியான நேரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதை நீங்கள் உறுதி செய்யவேண்டும்.
- நீதிமன்ற நிலுவை வழக்குகளை கண்காணித்து, சாட்சிகள் மற்றும் தேவையான தரவுகளை நீதிமன்றத்தில் வழங்கி, தண்டனை பெற்று தரவேண்டும்.
- குற்றப்பத்திரிகை பதியப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படாத வழக்குகளை உடனடியாக நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லவேண்டும்.
- நீதிமன்றங்களுடன் இணைந்து இந்த பணிகளை துரிதப்படுத்தி, உடனடியாக தண்டனை வாங்கித் தந்தால் மட்டும்தான் குற்றச் செயல்களை தடுக்க முடியும்.
- பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு வரும்போது, அவர்களை நீங்கள் நடத்துகின்ற விதத்தை பொறுத்துத்தான் காவல்துறையின் பிம்பம் கட்டமைக்கப்படும். அதை உணர்ந்து பொறுப்புடனும், கனிவுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

**முதல்வரின் முகவரி திட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கு சிறப்பு கவனம்!**

இதற்காகத்தான் ஒவ்வொரு காவல் நிலையத்திலும், வரவேற்பாளர்களை நியமித்திருக்கிறோம். அவர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதை எஸ்.பி., டி.எஸ்.பி., ஆகியோர் உறுதி செய்யவேண்டும்.

- முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சரியான தீர்வு காணப்படவேண்டும்.

**குறை தீர்க்கும் கூட்டத்தில் எஸ்.பி. கண்டிப்பாக இருக்க வேண்டும்!**

பொதுமக்கள் மிகவும் நம்பிக்கையோடு எனக்கு மனுக்களை அனுப்புகிறார்கள். எனவே, சட்டப்படி மேல்நடவடிக்கை எடுத்து, அந்த விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்கவேண்டும். இது பற்றி நானே மனுதாரர்களிடம் பேசித் தெரிந்துகொள்ளப் போகிறேன். காவல் துறையினரால் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள இருக்கிறேன்.

> **போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இனி கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன்.**

அதனால், ஒவ்வொரு மனு மீதும், சரியான விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தவேண்டும் என்று நான் ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தேன்.

சில மாவட்டங்களில், காவல் கண்காணிப்பாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முழுமையாக கலந்து கொள்ளவில்லை என்று தெரிய வந்திருக்கிறது. இப்படியான புகாருக்கு இடமில்லாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஆ.அருண், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, திருச்சி மண்டல காவல்துறை தலைவர் ஜி.கார்த்திகேயன், தஞ்சாவூர் சரகம் காவல்துறை துணைத் தலைவர் த.ஜெயச்சந்திரன், நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ் சிங், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் து.பெ.சுரேஷ்குமார், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி கே.மீனா, காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் நம்பிக்கையுடன் உங்களிடம் குறையை சொல்ல வரும்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண்டிப்பாக அங்கு இருக்கவேண்டும்.

நமது அரசு காவல்துறையினருக்காக கடந்த 2 ஆண்டுகளில்,

1. வாரத்தில் ஒருநாள் விடுமுறை.
2. பெண் காவலர்களுக்கு 8.00 மணிக்கு பணிக்கு வரும் சலுகை
3. காவலர்களின் குழந்தைகளுக்கு காப்பக வசதி.
4. காவல் நிலைய வசதிகளை மேம்படுத்துதல்
5. காவலர்களுக்கான குடியிருப்புகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல்

போன்ற பல நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொண்டிருக்கிறது.

காவலர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் வசதிகள் காவல் கண்காணிப்பாளர்கள் கண்காணிக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் சிறப்பாக பணி செய்ய முடியும். அடுத்து வரும் சில மாதங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை.

அடுத்த வாரம் வேளாங்கண்ணி கொடியேற்றம் நடக்கப் போகிறது. அங்கு வரும் பக்தர்கள் திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்ள ஏதுவாக, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கையாண்டு எந்த அசம்பாவிதமும் ஏற்படாமல், கண்காணிக்கவேண்டும்.

அடுத்த மாதம், பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு, சிலை நிறுவும் இடங்கள், சிலை ஊர்வலங்கள் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்தி பிரச்சினை ஏற்படாமல் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

காவல்துறை மிக முக்கியமான துறை. உங்கள் செயல்பாடுதான் அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தரும். அதனால் உயர் அதிகாரியிலிருந்து கடைநிலைக் காவலர் வரை ஒருங்கிணைந்து ஒரே எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும்.

இது வரை மாநிலத்தின் அமைதியைக் காக்கும் பணியை சிறப்பாக செய்துகொண்டு வருகிறீர்கள். இனியும் அது தொடரட்டும், மேலும் மேம்படட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஆ.அருண், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, திருச்சி மண்டல காவல்துறை தலைவர் ஜி.கார்த்திகேயன், தஞ்சாவூர் சரகம் காவல்துறை துணைத் தலைவர் த.ஜெயச்சந்திரன், நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ் சிங், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் து.பெ.சுரேஷ்குமார், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி கே.மீனா, காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# டெல்டா மாவட்டங்களின் கள ஆய்வில் முதல்வர் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

மட்டும் நேரடியாக கேட்டுப் பேசி, ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளமுடியும். ஆனால், அதையும் தாண்டி செயலாற்றவேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, இது வரை வேலூர், சேலம், மதுரை மற்றும் விழுப்புரம் ஆகிய 4 இடங்களில் மொத்தம் 17 மாவட்ட அதிகாரிகளோடு நேரடி ஆலோசனை நடத்தி முடித்திரு க்கின்றேன். அந்த வரிசையில், இன்றைக்கு தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட அதிகாரிகளாகிய உங்களைச் சந்திக்கின்றேன்.

**எதிர்பார்த்த மாற்றம் நிறைவேறத் தொடங்கிவிட்டது!**

முதன்முதலாக, வேலூருக்கு சென்றபோது நடத்திய கள ஆய்வுக்கும் – அடுத்தடுத்த மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை நான் பார்க்கிறேன். வேலூரில் நானோ, அமைச்சர்களோ, துறைச் செயலாளர்களோ என்ன மாதிரியான கேள்விகளை முன்வைத்தோம் என்று தெரிந்து கொண்டு, மற்ற மாவட்டத்தின் அதிகாரிகள் அதை தங்களுடைய மாவட்டத்தில் முடித்து வைத்திருக்கிறார்கள். இதுதான் நான் எதிர்பார்க்கின்ற மாற்றம். அந்த மாற்றம், இரண்டாவது கூட்டத்திலேயே நிறைவேறத் தொடங்கி விட்டது.

நம்முடைய மாவட்டத்திற்கு முதலமைச்சர் வந்தால், இதையெல்லாம் கேட்பார் என்று நினைத்து, ஓரளவுக்கு செயல்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதை இந்தத் திட்டத்தால் நடக்கின்ற நல்விளைவாகதான் நான் பார்க்கின்றேன்.

நான்கு மாவட்ட அலுவலர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது,

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்,
- கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்,
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,
- முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம்
- மக்களைத் தேடி மருத்துவம்

– போன்ற திட்டங்கள் இந்த மாவட்டங்களில் சிறப்பான முறையில், எந்த ஒரு தொய்வும் இல்லாமல் செயல்படுத்தப்படவேண்டும்.

100 நாள் வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வேலை வழங்கக் கூடிய சராசரி நாட்களை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டு, இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்ற பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுங்கள்.

- வேளாண் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டு வருகின்ற வட்டாரங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி வேளாண் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உடனடி முயற்சிகள் தேவை.
- காய்கறிகள் மற்றும் கனிகள் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உரிய நடவடிக்கை எடுங்கள்.
- தென்னை மரங்கள் அதிகம் நிறைந்துள்ள இந்த மாவட்டங்களில், சமீப காலமாக, இயற்கைச் சீற்றத்தாலும், உரிய வருமானம் இல்லாததாலும், சில வட்டாரங்களில் தென்னை மரங்களின் பரப்பு முந்தைய காலக்கட்டங்களை விடவும் வெகுவாகக் குறைந்து கொண்டு வருகிறது என்று நான் உணர்கிறேன், அதற்காகக் கவலைப்படுகிறேன். அதனால், தென்னை மரங்களின் பரப்பை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள உடனடியாகச் செய்யுங்கள்.
- உற்பத்தி அதிகரித்தால் மட்டும் போதாது. விளை பொருள்களுக்கான உரிய சந்தை விலையும் உழவர்களுக்குக் கிடைக்கவேண்டும். உழவர்கள் தங்களுடைய விளைபொருட்கள் லாபகரமான முறையில் விற்பனை செய்வதற்கு வேண்டிய eNAM (இநாம்) உள்ளிட்ட சந்தை வசதிகளைப் பெருக்க வேண்டும்.
- அதே நேரத்தில், இந்த மாவட்டங்களின் வளர்ச்சி என்பது வேளாண்மையை மட்டும் சார்ந்து இல்லாமல், தொழில் சார்ந்தும் இருக்க வேண்டும்.
- மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள், இதை உணர்ந்து மாவட்டம் முழுவதற்குமான அரசின் பொதுவான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேலும், உங்கள் மாவட்டத்திற்கு உரிய தனிப்பட்ட தேவைகளை கவனத்தில் வைத்து, அதனடிப்படையில், அரசுக்குத் திட்டங்களை எடுத்துச் சொல்லி, அதற்கான தகுந்த முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.
- பட்டா மாறுதலுக்காக வந்த விண்ணப்பங்களில் நிலுவையில் இருப்பதில் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக பட்டா வழுங்கவேண்டும்.
- பட்டாவில் திருத்தம் கோரும் விண்ணப்பங்களை உடனடியாக செய்து தரவேண்டும்.
- சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தால், குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சான்றிதழ்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தை மார்ச் 16ஆம் தேதி முதல் அமல்படுத்தி வருகிறோம். ஆனால், இந்த மாவட்டங்களில், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் அதிகமாக இருப்பதாக புள்ளிவிவரம் சொல்கிறது. இந்தத் திட்டத்தை கருணை உள்ளத்தோடு நீங்கள் கவனிக்கவேண்டும்.

சில துறைசார்ந்து கவனிக்க வேண்டியவிஷயங்களைநினைவூட்டுகிறேன்.

- நகர்ப்புற சாலைப் பணிகளில் திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் முன்னேற்றம் இல்லை என்று ரிப்போர்ட் சொல்கிறது.
- பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், பத்தாம் வகுப்பு தேர்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டம் கடைசியாக இருக்கிறது. இது கவலைக்குரியது. இதை அடுத்த ஆண்டுக்குள் மாற்றியாகவேண்டும்.

– இவை இரண்டிலும் மாவட்ட ஆட்சியர்கள் அதிக அக்கறை காட்டவேண்டும்.

**சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி: அதிக கவனம் தேவை!**

பொருளாதார வளர்ச்சிக்கு, அரசுத் திட்டங்கள் மட்டுமில்லாமல், வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்ற பல்வேறு கடனுதவிகள் எவ்வளவு அவசியம் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அத்தகைய கடனுதவிகள் வழங்குவதில், குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவி வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னால், நிலுவையில் இருக்கின்ற சாலைப் பணிகளை முடித்து, மக்களுடைய இன்னல்களைப் போக்கவேண்டும். எனவே, ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் எல்லா பணிகளையும் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்துக்கு உரிய தயாரிப்புடன் வந்து, இறுதி வரை ஆர்வத்தோடு பங்கேற்று, உங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகளை தெளிவாகச் சொல்லி, பல்வேறு கருத்துகளை இங்கே பகிர்ந்து கொண்ட அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

**சிறப்பான செயல்பாட்டுக்கு அரசு துணை நிற்கும்!**

தொடர்ந்து மக்களிடம் சென்று, அவர்களோடு இருந்து அவர்களின் பிரச்சினைகளை சரி செய்து, தேவைகளை நிறைவேற்றி, நமது அரசுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் உரிய மனநிறைவு கிடைக்கும் வகையில் செயல்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் சிறப்பான செயல்பாட்டுக்கு இந்த அரசு எப்போதும் துணை நிற்கும்.

**நல்லாட்சியின் இலக்கணம்!**

அதிகாரிகளும் அமைச்சர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதும் மாவட்ட அலுவலகங்களும் தலைமைச் செயலகமும் ஒருங்கிணைந்து செயல்படுவதும்தான் நல்லாட்சியின் இலக்கணம்.

நாம் அனைவரும் “மக்கள் சேவகர்கள்” என்பதை மனதில் வைத்து செயலாற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு துறைச் செயலாளர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!... 2ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தை அண்ணன் கலைவாணன் அவர்கள் சேலம் மாநாட்டினுடைய முன்னோட்டம் போல சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார். எந்த நிகழ்ச்சியையும் பிரமாண்டமாகவும் அதே நேரத்தில் ஒழுங்குடனும் நேர்த்தியாவும் செய்பவர்தான் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கலைவாணன் அவர்கள்.

தி.மு.கழகம் மீது வைக்கப்படுகின்ற ஒரே குற்றச்சாட்டு குடும்பக் கட்சி என்பது தான். ஆனால், நம்முடைய அண்ணன் கலைவாணன் அவர்களுடைய குடும்பம் கழகத்திற்காக எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் உழைத்த குடும்பம். மறைந்த அண்ணன் பூண்டி செல்வம் அவர்களுடைய இடத்தை நிரப்பியவர் தான் நம்முடைய அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்கள்.

அண்ணன் அவர்கள் இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுத்து பணியாற்ற வைப்பார். அந்த சுதந்திரத்திற்கு அடையாளம்தான் நம்முடைய மாநில துணை செயலாளர் சகோதரர் இளையராஜா அவர்கள். சொல்லப்போனால், இளையராஜா அவர்கள் எனக்கே சீனியர். உண்மையைச் சொல்ல வேண்டும் அல்லவா?

இன்றைக்கு இளையராஜா அவர்கள் மாவட்ட அமைப்பாளராக இருந்து, இன்று மாநிலத் துணைச் செயலாளர் ஆகியிருக்கிறார் என்றால், அதற்கு அவருடைய உழைப்பு. அந்த உழைப்புக்கு அண்ணன் கலைவாணன் அவர்கள் கொடுத்த அந்தச் சுதந்திரம் தான் காரணம்.

அதேபோல் தற்போது திருவாரூர் மாவட்ட அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரர் பனங்குடி ஏ.எஸ். குமார் அவர்கள் ஏற்கனவே ஒன்றிய அமைப்பாளராக இருந்து தன்னுடைய உழைப்பின் மூலம் இந்தப் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். இங்கே ஒரு விஷயத்தை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். மாவட்ட அமைப்பாளர்கள் நேர்காணல் நடந்தது. தமிழ்நாடு முழுவதும் நானும் மாநில துணைச் செயலாளர்கள் அத்தனை பேரும் பயணம் செய்து ஒவ்வொரு மாவட்டமாக நேர்காணல் நடத்தினோம்.

**இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுக்கும் கலைவாணன்!**

மாவட்ட அமைப்பாளர் நியமனத்தின் போது நம்முடைய சகோதரர் குமார் அவர்களுடைய பணிகளைக் கண்டு, நாங்களே அவரை மாவட்ட அமைப்பாளர் ஆக்கலாம் என்று முடிவு செய்து வைத்திருந்தோம். ஆனாலும் எல்லா மாவட்டச் செயலாளர்களிடமும் பரிந்துரை கடிதம் வாங்குவதைப்போல் அண்ணன் அவர்களிடமும் வாங்கியிருந்தோம்.

நாங்கள் நினைத்திருந்த அதே குமார் அவர்களுடைய பெயரைத்தான் அண்ணனும் பரிந்துரை செய்திருந்தார். அந்த அளவுக்கு இளைஞர் அணிக்கு சுதந்திரம் கொடுத்து, நம்மோடு பயணிப்பவர்தான் நம்முடைய அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்கள். அவருக்கு இந்த நேரத்தில் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தில் உழைத்தால் முன்னேறலாம் என்பதற்கு இந்த இளைஞர் அணி ஒரு மிகச்சிறந்த சாட்சி. `உழைப்பு... உழைப்பு... உழைப்பு. உழைப்பு என்றால் ஸ்டாலின், ஸ்டாலின் என்றால் உழைப்பு' என்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலேயே பாராட்டப்பட்டவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள். அத்தகைய நம்முடைய தலைவர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர் அணியின் மூலம் உழைப்பால் உயர்ந்தவர்கள் ஏராளம். அதற்கு மிகச் சிறந்த உதாரணம் நம்முடைய தலைவர் அவர்கள். அவருடைய உழைப்பின் மூலம் இன்று இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பில் அமர்ந்திருக்கின்றார்.

இந்த அணியில் உள்ள ஒன்பது மாநிலத் துணைச் செயலாளர்களில் எட்டு பேர் மாவட்ட அமைப்பாளர்களாவும், ஒருவர் மாவட்டத் துணை அமைப்பாளர்களாகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்கள். அதனால்தான் தலைவர், அவர்களுக்கு அந்த அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர் நேர்காணலில், தமிழ்நாடு முழுவதும் 658 நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 658 நிர்வாகிகளில் 452 பேர் ஏற்கனவே இளைஞர் அணியில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளராகக் கட்சிப் பணியாற்றியவர்கள். கழகப் பணியாற்றியவர்கள்.

**25 லட்சம் புதிய உறுப்பினர்கள்!**

இன்றைக்கு இளைஞர் அணியின் சார்பாக ஏராளமான பணிகளை நாம் செய்து வருகின்றோம். 2019ஆம் ஆண்டு நான் மாநிலச் செயலாளராகத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட பொழுது தலைவர் அவர்கள் என்னிடத்தில் ஒரு டார்கெட் கொடுத்தார். ஒவ்வொரு தொகுதிக்கும் குறைந்தது பத்தாயிரம் பேரை இளைஞர் அணியில் சேர்க்க வேண்டும் என்று. அப்படிக் கிட்டத்தட்ட 25 லட்சம் புதிய உறுப்பினர்களை நாம் சேர்த்தோம். அந்த இலக்கை திருவாரூர் மாவட்டம் சரியாக எட்டியது. இப்போது கூட `இல்லந்தோறும் இளைஞர் அணி' யிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, உறுப்பினர்களைச் சேர்த்த மாவட்டம் இந்தத் திருவாரூர் மாவட்டம். தொகுதி தோறும் இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் நம்முடைய தலைவர் அவர்கள் கழகத்துடைய இதயம் பொதுக்குழுவிலே இளைஞர் அணியைப் பாராட்டினார்.

சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணியின் மாநில மாநாட்டை வெற்றி பெற வைக்கவேண்டும் என்பது தான் இந்தக் கூட்டத்தின் ஒரே நோக்கம். நீங்கள் அனைவரும் இந்த மாநாட்டுக்கு வந்து சிறப்பிக்கவேண்டும். சமீபத்தில் வேறு ஒரு மாநாடு நடந்தது. அதாவது ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணமாக அந்த மாநாடு நடந்தது. தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் புரியும். அந்த மாநாட்டை எப்படி நடத்தினார்கள். அதில் ஏதாவது கொள்கை பேசினார்களா? ஒன்றிய அரசை எதிர்த்து ஏதாவது ஒரு தீர்மானம் போட்டாங்களா? இத்தனைக்கும் அதே நாளில் நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நடைபெற்ற உண்ணாநிலை அறப்போராட்டத்தில் நான் ஒரு சவால் விட்டேன். நீட் தேர்வில் வெற்றி பெற்றும் கல்லூரியில் சேர இடம் கிடைக்காமல் ஒரு மாணவன் இறந்துட்டான். அந்த மாணவனுடைய தந்தையும் இறந்துவிட்டார்.



திருவாரூரில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் மற்றும் கழக முன்னோடிகள், நிர்வாகிகள் மேடையில் உள்ளார்கள்.

**'நீட்' தேர்வை ரத்து செய்த கலைஞர்!**

நுழைவுத்தேர்வு கொண்டு வந்த போது, கலைஞர்தான் நுழைவுத் தேர்வை ரத்து பண்ணினார். கிராமங்களில் இருந்து ஏழை எளிய மாணவர்கள் மருத்துவர் ஆகணும் என்றால் பன்னிரண்டாம் வகுப்பில் வாங்குகின்ற மதிப்பெண்ணே போதும் என்று கலைஞர் அவர்கள் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். இன்னும் சொல்கிறேன், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரைக்கும் தமிழ்நாட்டுக்குள்ளே நீட் தேர்வு வரவில்லை. மற்ற மாநிலங்களில் எல்லாம் வந்துடுச்சு. ஆனால், ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அதை வரவிடலை. எந்தக் காலத்தில் நீட் தேர்வு தமிழ்நாட்டுக்குள் வந்தது. அந்த அம்மையார் இறந்த பிறகு. இந்த அடிமைக் கூட்டம் இந்த நீட் தேர்வைக் கொண்டு வந்து, இதுவரைக்கும் 21 உயிர்கள் பறிபோய் விட்டன. இதைத் தற்கொலை என்று சொல்கிறார்கள். இது தற்கொலை கிடையாது. கொலை. ஒன்றிய பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் சேர்ந்து செய்திருக்கக்கூடிய 21 கொலைகள். அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து சென்னை குரோம்பேட்டை ஜெகதீஸ் என்ற மாணவன் வரை 21 கொலைகள்.

ஆம், நம்ம தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் சொன்னேன். நீட் தேர்வை ரத்து செய்வதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொன்னோம். ரத்துச் செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தோம். அதற்காக நாம் உண்மையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதுவரைக்கும் என்னவெல்லாம் பண்ணினோம். ஆட்சி அமைந்தது. ஏற்ற ஒரே மாதத்தில் தலைவர் அவர்கள் நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தார். அவங்க மாநிலம் முழுவதும் சென்று சுற்றுப்பயணம் செய்து மாணவர்கள், பெற்றோர், மருத்துவர்கள், கல்வியாளர்களைச் சந்தித்தார்கள்.

நீட் தேர்வு வேண்டுமா வேண்டாமா என அவர்களிடத்தில் விவாதிக்கப்பட்டது. அதன்பிறகு, சட்டமன்றத்திலே இரண்டு முறை மசோதா நிறைவேற்றப்பட்டு அனுப்பினோம். ஆளுநர் ஆர்.என்,ரவி அவர்கள் அதை வாங்கி வைத்துக் கொண்டு, திருப்பி அனுப்பிவிட்டார்.

**தைரியமில்லாத அ.தி.மு.க.!**

மீண்டும் அடுத்த நாளே தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார்கள். மீண்டும் மசோதா சட்டமன்றத்திலே 234 எம்.எல்.ஏக்களில், அதிமுக உட்பட நீட் தேர்வை ரத்து செய்யவேண்டுமென்று அந்த 230 பேர் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தார்கள். அந்த ஓட்டு போடாத, ஆதரிக்காத அந்த நாலு பேர் யாரென உங்களுக்கேத் தெரியும்.

அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் நான் சொன்னேன். ' மதுரையில் ஒரு மாநாடு நடந்துக்கொண்டிருக்கிறது. மாநாடு என்றால், தீர்மானங்களெல்லாம் போடுவீங்க. 32 தீர்மானங்கள் போட்டு இருக்காங்க. அதில் ஒரு தீர்மானமானத்திலாவது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஒரு கோரிக்கை வைங்க. நீங்கள் கட்டளையிட மாட்டீங்கள். உங்களுக்கு அவ்வளவு தைரியமெல்லாம் கிடையாது.

உங்களுடன்தானே கூட்டணியில் இருக்காங்க, உங்களுடைய வாலை பிடித்தபடிதானே சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அ.தி.மு.க.வோடு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வைக்க வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் நீட் தேர்வு ரத்துச் செய்ய முடியுமான்னு ஒரே ஒரு கோரிக்கை வையுங்கள்" என்றேன்.

ஆனால் அந்த மாநாட்டில் நடந்தது என்ன? தயிர் சாதம் நல்லாருக்கா, புளி சாதம் நல்லா இருக்கா என்று விவாதிக்காத குறையாக ஆடல் பாடல் கலைநிகழ்ச்சி நடத்தியிருக்கின்றனர். இன்று அ.தி.மு.க. மாநாட்டுக்குப் போய் விட்டு வந்த ஒருவர், 'என் மனைவியை மாநாட்டில் காணவில்லை' என்று போலீஸ்ல புகார் கொடுத்து இருக்கிறார். நான் ஏதோ வேடிக்கைக்காகச் சொல்லலை, அப்படி ஒரு மாநாட்டை, ஒரு கேளிக்கூத்தை நடத்தியிருக்காங்க.

இந்த நேரத்திலே உங்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். காரில் வரும்போது நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளரிடத்திலே, `என்ன அண்ணா, திருவாரூர் மாவட்டத்திலே உண்ணாவிரதப் போராட்டம் எப்படி நடந்தது' என்று கேட்டுக்கிட்டு இருந்தேன். கிட்டத்தட்ட 3,000 இளைஞர்கள், மாணவர்கள், கட்சிக்காரர்கள் கலந்துக்கிட்டாங்க. உணர்வுப் பூர்வமாகக் கலந்துகொண்டாங்க. காலை 9 மணிக்கு வந்து உட்கார்ந்த வங்க மாலை 5 மணிக்குத் தான் எழுந்து போனாங்க' என்றார். புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு, இளைஞர் அணியின் சார்பாக மாணவர் அணி, மருத்துவ அணிக்கு முதல் போராட்டத்தை இவ்வளவு பெரிய ஒரு வெற்றிப்போராட்டமாக மாற்றிக்காட்டிய உங்கள் அத்தனைப்பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அத்தனை பேரும் உதயநிதியாக மாற வேண்டும்!**

இது ஒரு முழு வெற்றி என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நம்முடைய எதிர்ப்பை தெரிவிச்சி இருக்கோம். நான் அந்த உண்ணாவிரதப் போராட்டத்திலேயே சொன்னேன். நீட் தேர்வு ரத்தாகும் வரை இளைஞர் அணியினுடைய போராட்டம் கண்டிப்பாகத் தொடரும். அது டெல்லிவரை போனாலும் அதையும் செய்து காட்டுவோம்.

இங்கே நீட் தேர்வை ஒழிக்கிறதுக்கு இந்த ஒரு உதயநிதி பத்தாது. இங்க வந்திருக்கக்கூடிய நீங்க அத்தனை பேரும் உதயநிதியா மாறி போராட்டக் களத்துக்கு வரணும். இது என்னுடைய தனிப்பட்ட விஷயங்களுக்காக நடத்துகின்ற போராட்டம் கிடையாது.

மாணவர்களுடைய கல்வி உரிமைக்காக மக்களுக்காக நடத்துற போராட்டம். எப்படி இந்தி திணிப்பிற்குத் தலைவர் கலைஞர் போராட்டத்தில இறங்கினாரோ, எப்படி எமர்ஜென்சி காலத்துல மிசா காலத்துல நம்முடைய தலைவர் அவர்கள் களத்தில் இறங்கினாரோ, அதே மாதிரி இந்த நீட் தேர்வு ரத்து செய்வதற்காக நடைபெறும் போராட்டத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்குவதற்குத் தயாராக இருக்கணும்.

**மோடி அரசின் ஊழல் முகம்!**

சமீபத்தில் சி.ஏ.ஜி அறிக்கை வெளிவந்தது. அதைப்பற்றி யாரும் பேச மாட்டேங்கிறாங்க. இந்தச் சி.ஐ.ஜி அறிக்கையில் மோடி அரசினுடைய அரசினுடைய ஊழல் முகம் வெளிவந்திருக்கு. உண்மை முகம் ஊழல் முகம் வெளிவந்திருக்கிறது. `ஆயுஷ்மான் பாரத மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'என்ற இன்சூரன்ஸ் பாலிசி. அதுல இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு இன்சூரன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கு. இறந்து போனவர்களுக்கான இன்ஷூரன்ஸ்.

இறந்து போன 403 பேருக்குச் சிகிச்சை ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்க. ரமணா படத்தில் இறந்து போய் டெட்பாடியை வச்சுக்கிட்டு ட்ரீட்மெண்ட் என்று பில் போடுவதற்காக நேரம் கடத்துவாங்க. அதேபோல் இறந்து போன 403 பேருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஆயுஸ்மேன் பாரத் திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கியிருக்காங்க.

அடுத்து சாலைகள் அமைப்பதற்கான பாரத் மாலா என்று ஒரு திட்டம். ஒரு கிலோமீட்டருக்கு 32 கோடி செலவு ஆச்சு என்று கணக்கு காட்டி இருக்காங்க. ஒரு கிலோமீட்டருக்கு 32 கோடி ரூபாய். அதுல கிட்டத்தட்ட 7 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செஞ்சிருக்காங்க.

டெல்லியில் துவாரகா விரைவு சாலைத் திட்டத்தில் ஒரு கிலோமீட்டர் ரோடு போடுவதற்கு எவ்வளவு தெரியுமா செலவுக் கணக்கு காட்டி இருக்காங்க. ஒரு கிலோமீட்டர் ரோடு போட 250 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறார்கள். இவங்கதான் நமக்கு ஊழல் ஒழிப்புப் பாடம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல கொரோனா காலத்தில் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். 'பி.எம். கேர்ஸ் பண்ட்' என்று ஒன்று வசூலிக்க ஆரம்பித்தார்கள். நன்கொடை. கொரோனாவில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எல்லாரும் நன்கொடை கொடுங்கள் என்று நாடு முழுவதும் வசூலித்தார்கள்.

இதுவரைக்கும் அந்தப் பிஎம் கேர்ஸ் பண்டுல 32 ஆயிரம் கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கு. ஆனால், அந்த 32 ஆயிரம் கோடி ரூபாயில் இதுவரைக்கும் ஒரு ரூபாய்க்கு கூட கணக்கில் காட்டலை. தகவல் அறியும் சட்டத்தில் கேள்வி கேட்டால், அதைக் கேட்க மக்களுக்கு உரிமை கிடையாது என்று சொல்றாங்க.

இதையெல்லாம் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். மோடி அவர்கள் எங்கே போய் பேசினாலும் இந்தியாவில் எந்த மாநிலத்திற்குப் போய் பேசினாலும் தி.மு.க பற்றியும், நம்முடைய தலைவர் அவர்களைப் பற்றியும்தான் பேசிவருகிறார்.

**மணிப்பூர் மாநிலம் எரிந்து கொண்டிருக்கிறது!**

மணிப்பூர் என்ற மாநிலம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. ஐந்து மாதங்களாக. அதைப் பத்தி பேச மாட்டேங்கிறாங்க. மணிப்பூரை ஆண்டு கொண்டு இருப்பது பா.ஜ.க. அரசு. பா.ஜ.க. தான் அங்க முதலமைச்சர். கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. நமக்கெல்லாம் இங்க இன்டர்நெட் இருக்குல்ல அங்க எதுவுமே கிடையாது. ஆனாலும் சமீபத்தில் ஒரே ஒரு வீடியோ மட்டும் வந்துருச்சு. அது வந்ததுக்கு அப்பறம்தான் பெரிய எதிர்ப்பு கிளம்புகிறது. பிறகுதான் பாராளுமன்றத்திற்கு மோடி அவர்கள் வந்து பேசினார்.

ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்த வேண்டியதாக இருந்தது. அப்படி வந்து இரண்டு மணி நேரம் பேசியதில், ஒரு மணி நேரம் 50 நிமிஷம் தி.மு.க. பத்தியும் கலைஞர் குடும்பம், தி.மு.க அரசு பற்றியும் பேசிவிட்டு வெறும் அஞ்சு நிமிஷம் மட்டுமே மணிப்பூர் பற்றி பேசினார். தி.மு.க ஆட்சியில் கலைஞர் குடும்பம் மட்டும்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கு. நான் சொல்கிறேன். ஆமாம், கலைஞர் குடும்பம்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கு. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கலைஞர் குடும்பம்தான்.

நான் உங்களைக் கேள்வி கேட்கிறேன். இந்த ஒன்பது வருட ஆட்சியில் என்ன செய்து கிழிச்சீங்க? இருக்கிற கருப்புப் பணத்தை எல்லாம் ஒழிச்சுடுவோம்னு சொன்னீங்க. ஞாபகம் இருக்கிறதா, திடீரென ஒரு நாள் நடுராத்திரியில எழுந்து `1,000 ரூபாய் நோட்டும், 500 ரூபாய் நோட்டும் செல்லாது'என்றார். ஏன் என்று கேள்வி கேட்டால், புதிய இந்தியா பிறக்கப் போகுதுன்னார். அந்தப் புதிய இந்தியா எங்க பொறந்துச்சுனு யாராவது பார்த்தீங்களா?

அது மட்டுமல்ல இல்ல கருப்புப் பணத்தை எல்லாம் மீட்டு, ஒவ்வொருத்தருடைய வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் ரூபாய் போடுறேன்னு சொன்னார். 15 ரூபாயாவது போட்டீங்களா? 15 பைசா கூடப் போடலை. இருக்குறதையும் புடிங்கிக்கிட்டாங்க.

**அதானி யார்?**

வேலை வாய்ப்பு உருவாக்கி தருவோம் என்றார்கள், அதையும் செய்யல. உங்களால் வாழ்ந்த குடும்பம் யார்? அதானி குடும்பம். இந்த அதானி யாரு? மோடி உடைய மிக மிக நெருங்கிய நண்பர். உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தார். இந்தியாவில் உள்ள அத்தனை பொதுத் துறையையும் தூக்கி அதானி கையில கொடுத்தாச்சு. அதானி ரயில்வே வந்துருச்சு, அதானி ஏர்போர்ட் வந்துருச்சு, அதானி ரோடு வேஸ் வந்துருச்சு, அதானி போர்ட் வந்துருச்சு, அதானி ஸ்டேடியம் வந்துருச்சு, உங்களால் வாழ்ந்த ஒரே குடும்பம் அந்த அதானி குடும்பம்தான்.

**எஜமான்களை துரத்த வேண்டும்!**

இதையெல்லாம் நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு எப்படிச் சென்ற 2021 சட்டமன்ற தேர்தலில் அடிமைகளைத் துரத்தி வீட்டுக்கு அனுப்பினோமோ, அடிமைகளுடைய ஓனர்ஸ், எஜமானர்களையும் வீட்டிற்கு நீங்கள் துரத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அதையெல்லாம் நம் மனதில் ஏந்திக் கொண்டு, கழகப் பணியாற்றிட வேண்டும். நம்முடைய கழகக் கொள்கைகளை, கழக அரசினுடைய சாதனைகளை, கலைஞருடைய சாதனைகளை எல்லாம் தெரிந்துகொள்ளத்தான் ஒரு கொள்கை மாநாடாக, கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மாநாடாக இளைஞர் அணிக்கு அந்த வாய்ப்பை தலைவர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

நீங்கள் அத்தனைப்பேரும் குடும்பத்தோடு வந்து, அந்த மாநாட்டில் கலந்து கொண்டு அந்த மாநாட்டை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு மாநாடாக மாற்றிக் காட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம் மூலமாகக் கேட்டுக்கொண்டு, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, வாய்பளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கலைவாணன் அவர்களுக்கும், சகோதரர் இளையராஜா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

முன்னதாக திருவாரூர் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமை உரை ஆற்றினார். அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாநில இளைஞர் அணி செயலாளர்கள் இளையராஜா, ஆனந்த குமார் ஆகியோர் முன்னிலை உரையாற்றினார்கள். அமைப்பாளர் பனங்குடி குமார் அனைவரையும் வரவேற்று பேசினார். கொரடாச்சேரி வடக்கு ஒன்றிய அமைப்பாளரும் காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவருமான பிரபாகரன் நன்றி கூறி பேசினார்.

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!


# பசிப் பிணியைப் போக்கும் மகத்தான கருணைத் திட்டம்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, ஆக. 27-*

*முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பசிப்பிணியைப் போக்கும் மகத்தான கருணைத் திட்டம் என 'தினத்தந்தி' நாளேடு 26.8.2023 தேதியிட்ட இதழில் 'பசிப்பிணியைப் போக்கும் காலை உணவு திட்டம்!' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.*

*அது வருமாறு:-*



தலையங்கம்
தினத்தந்தி
26.8.2023 (சனிக்கிழமை)
பசிப்பிணியை போக்கும் காலை உணவு திட்டம்!

*"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார், வள்ளலார். அது போல, இளந்தளிர்கள் பசியால் வாடி நின்றபோதெல்லாம் நமது தலைவர்களின் உள்ளத்தில் கருணை பெருக்கெடுத்து ஓடி, அவர்களின் பசியை போக்கும் திட்டங்கள் உருவாகின. திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியிலுள்ள ரெயில்வே கேட் மூடியிருந்ததால், அந்த வழியே சுற்றுப்பயணம் சென்ற காமராஜர், காரை விட்டு இறங்கி நின்ற நேரத்தில், மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை பார்த்து, "நீ ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை?" என்று கேட்டிருக்கிறார். தன்னிடம் பேசுவது முதல்அமைச்சர் என்பதை அறியாத அந்த சிறுவன், "பள்ளிக்கூடத்துக்கு போனால் யார் சோறு போடுவார்கள்?" என்று கூறியிருக்கிறான். "சோறு போட்டால் பள்ளிக்கூடம் போவாயா?" என்று காமராஜர் கேட்க, "போவேனே" என்று உற்சாகமாக அந்த சிறுவன் அளித்த பதில்தான், காமராஜர் உள்ளத்தில் மதிய உணவு திட்டம் தோன்றி செயல்பட வைத்தது. அதற்கு துணை நின்றவர், பெரியாரின் பெருந்தொண்டராக இருந்த பொதுக்கல்வி இயக்குனர் நெ.து. சுந்தரவடிவேலு.*

*அதன் தொடர்ச்சியாக, எம்.ஜி.ஆர். அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு திட்டத்தை கொண்டுவந்தார். முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை அசோக்நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த ஒரு விழாவில் கலந்துகொள்ள சென்றபோது, சில மாணவிகள் சோர்வாக இருந்ததைப் பார்த்து, "காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?" என்று கேட்ட நேரத்தில், பெரும்பாலானவர்கள், "நாங்கள் சாப்பிடவில்லை" என்றும், "எங்கள் வீட்டில் சமையல் செய்யவில்லை" என்று ஒரு மாணவியும், "மதியம் பள்ளிக்கூடத்தில் சாப்பிடு" என்று தாயார் சொன்னதாக ஒரு மாணவியும், "காலையில் டீ மட்டும் குடித்துவிட்டு வந்தேன்" என்ற மற்றொரு மாணவியின் பதிலும் அவருடைய உள்ளத்தை உருக்கியதன் காரணமாக, அவருடைய சிந்தையில் உதித்தது தான் காலை உணவு திட்டம். அதாவது, செவிக்கு உணவு அளிக்கும் முன்பே வயிற்றுக்கு உணவு அளித்துவிட முடிவு செய்தார்.*

*முதலாவதாக, 15.9.2022 அன்று அண்ணா பிறந்தநாளில் இந்த திட்டத்தை மதுரையில் ஆதிமூலம் மாநகராட்சி பள்ளியில் தொடங்கிவைத்தார். முதல் கட்டமாக 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் 1,545 பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. பின்பு 28.2.2023 அன்று இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டு, 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 மாணவர்களுக்கும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்தநிலையில், தமிழ்நாட்டிலுள்ள 31,008 அரசு பள்ளிக்கூடங்களிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் 17 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவளிக்கும் திட்டத்தை கலைஞரின் சொந்த ஊரான திருக்குவளையில், அவர் படித்த பள்ளிக்கூடத்தில் நேற்று தொடங்கிவைத்து, மாணவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டார்.*

*அரசு பள்ளிக்கூடங்களில் தொடக்கக்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு இனி பசிப்பிணி இல்லை. காலையும், மதியமும் பள்ளிக்கூடத்திலேயே சாப்பிட்டுவிடலாம். அரசு பள்ளிக்கூடங்களில் படித்த மாணவர்களுக்கு எடப்பாடி பழனிசாமி கொண்டுவந்த மருத்துவம், என்ஜினீயரிங் உள்பட தொழிற்கல்வியில் 7.5 சதவீத இடஒதுக்கீடு இருக்கிறது. உயர் கல்வி பெறும் அரசு பள்ளிக்கூட மாணவிகளுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த மாதம் ரூ.1,000 பெறும் 'புதுமைப்பெண்' திட்டம் இருக்கிறது. எனவே, நான் அரசு பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன் என்று மாணவர்கள் நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு சொல்ல முடியும். காலை உணவு திட்டம் பசிப்பிணியை போக்கும் ஒரு கருணை திட்டம்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*




தி.மு.கழக வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் 25.8.2023 காலை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் அணியின் செயலாளர் கவிஞர் காசி. முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் கழகத் தலைவர் அறிவித்தபடி தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "கலை இரவு திருவிழா" நிகழ்ச்சி தமிழகம் முழுதும் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மாநில நிர்வாகிகள், திண்டுக்கல் ஜெயன், கோவை முருகவேல், நாமக்கல் மூர்த்தி, உமரிசங்கர், தாமரைபாரதி, பி.டி.பாண்டிசெல்வம், வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மீஞ்சூர் பாஸ்கர், தர்மசெல்வன், சத்தியமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் தொழில் மற்றும் வணிக சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக திகழச் செய்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். அப்போது முதலமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, மீனவர் நல மாநாடு நடத்தி, நலத்திட்ட உதவிகளை வழங்கி, மீனவர்களின் நல்வாழ்விற்காக பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். அப்போது முதலமைச்சர் அவர்கள் மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கிஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் அரசுத் துறையைச் சேர்ந்த 8 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் 4 தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் பள்ளிகளில், சுமார் 17 இலட்சம் மாணவச் செல்வங்களின் பசியைப் போக்கும் விதமாக விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி இந்தியாவிற்கே வழிகாட்டியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு மாணவச் செல்வங்களின் சார்பாகவும், பெற்றோர்களின் சார்பாகவும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் - சிறந்த முறையில்

# சமூகத் தொண்டாற்றும் அரசுத்துறை பணியாளர்கள்- தொண்டு நிறுவனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நினைவுப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்!

நாகை, ஆக. 27 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றி வரும் அரசுத் துறையைச் சேர்ந்த 8 பணியாளர்கள் மற்றும் சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றி வரும் 4 தொண்டு நிறுவனங்களின் நிர்வா கிகள் ஆகியோரைப் பாராட்டி, நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

**சிறந்த சமூக சேவையாற்றிய அரசுத் துறை பணியாளர்கள்**

நாகப்பட்டினம் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் ஜீ. ஜெயராமன், கடந்த 15 ஆண்டுகளாக நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட 6 வார்டுகளில் கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்து கொசு மருந்து தெளிக்கும் பணியை சிறப்பாக மேற்கொண்டு பொதுமக்களிடம் பாராட்டுப் பெற்றுள்ளார்.

ஏனங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி பி. காந்திமதி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக பிரசவங்களை கையாண்டு, தாய் மற்றும் சிசு இறப்பின்றி மகப்பேறு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்.

வேதாரண்யம், ஆறுகாட்டுத்துறை குழந்தைகள் மையத்தில் குழந்தை கள் மைய உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி ஆர். முருகேஸ்வரி, குழந்தைகளின் வீடுகளுக்கே சென்று குழந்தைகளை மையத்திற்கு அழைத்து வருவதோடு, அங்குள்ள 30 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளை சரியான நேரத்தில் அளித்து தனி கவனம் செலுத்தி பெற்றோர்களின் பாராட்டுகளைப் பெற்று வருகிறார்.

தெத்தி, நிஜாம் காலனி அங்கன்வாடி பணியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி எஸ். சம்ஸத்பேகம், குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்றுத் தருவதோடு, சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மையத்தைப் பராமரித்து, அங்குள்ள 15 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளை சரியான நேரத்தில் அளித்து தனி கவனம் செலுத்தி பெற்றோர்களின் பாராட்டுகளை பெற்று வருகிறார்.

வேதாரண்யம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மண்டல அலுவலக மீன்வள மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வரும் எஸ்.சி.விக்னேஷ்வர், கடந்த 31.1.2023 அன்று படகு கவிழ்ந்து கடலில் தத்தளித்த புஷ்பவனம் மற்றும் நாலுவேதபதி கிராமங்களைச் சேர்ந்த 3 மீனவர்களை படகில் சென்று காப்பாற்றியது, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காயமடையும் போது அவர்களை உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை அளிப்பது போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்.

நாகப்பட்டினம் வட்டம், புத்தகரம் கிராமத்தின் கிராம உதவியாளராக பணிபுரிந்து வரும் எம். சேகர், விடுப்பு எடுக்காமல் அனைத்துப் பணி நாட்களிலும் சிறந்த முறையில் பணியாற்றி அக்கிராம மக்கள் மற்றும் உயரதிகாரிகளின் நற்பெயரைப் பெற்றுள்ளார்.

கீழவேளூர் காவல் நிலைய முதல் நிலை காவலராக பணிபுரிந்து வரும் விக்னேஷ், கீழ்வேளூர் பகுதியில் உண்டியல் திருடர்கள் பற்றிய இரகசியத் தகவல்களை அளித்து அவர்களை கைது செய்வதற்கு உதவியது, எரிசாராயம் கடத்தியவர்களை துரத்திப் பிடித்தது, தனிப்பிரிவு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் காவல்துறை உயரதிகாரிகளுக்கு அளித்து திருட்டுகள் மற்றும் மோதல் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது போன்ற பல்வேறு பணிகளை சிறப்புடன் மேற்கொண்டு வருகிறார்.

தலைஞாயிறு தீயணைப்பு நிலைய தீயணைப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து வரும் எம். அய்யாதுரை, நீர்முளை அரசு ஆரம்ப சுகாதார நிலைய கழிவறை கோப்பைக்குள் சிக்கிக் கொண்ட தாஷிகா என்ற 8 வயது சிறுமியை பத்திரமாக மீட்டு அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய அரசுத் துறையைச் சேர்ந்த ஜீ. ஜெயராமன், திருமதி பி. காந்திமதி, திருமதி ஆர். முருகேஸ்வரி, திருமதி எஸ். சம்ஸத்பேகம், எஸ்.சி. விக்னேஷ்வர், எம். சேகர், விக்னேஷ், எம். அய்யாதுரை ஆகியோரது சேவைகளைப் பாராட்டி முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

சிறந்த சமூக சேவையாற்றிய தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சி. இராஜேந்திரன், கடந்த 10 ஆண்டுகளாக ஆதரவின்றி உயிரிழந்தவர்களின் உடல்கள், முதியோர் இல்லங்களில் இறப்பவர்கள், வசதி இல்லாதவர்கள் மற்றும் மருத்துவமனை களில் அடையாளம் தெரியாத பிணக்கூறு செய்யப்பட்ட உடல்கள் ஆகியவற்றை உரிய மரியாதையுடன் தனது சொந்த செலவில் ஈமச்சடங்குகள் செய்து நல்லடக்கம் செய்து வருகிறார்.

வள்ளலார் தருமச்சாலையைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், வேதாரண்யம் நகராட்சி குழந்தைகள் நல பாதுகாப்பு உறுப்பினருமான மு.வெற்றியழகன், மாற்றுத்திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர் மற்றும் முதியவர்களுக்கு தினசரி மூலிகைக் கஞ்சி வழங்குவது, இடம் பெயர்ந்து வரும் மனநலம் குன்றியவர்களுக்கு உணவு, உடை மற்றும் மருந்து வழங்குவது, வள்ளலார் எக்ஸ்னோரா மூலம் மரக்கன்றுகள் வழங்குவது, குழந்தைகள் மற்றும் பெண்கள் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரக்கன்றுகள் நடுதல், பாரம்பரிய உணவு திருவிழா, பேரிடர் விழிப்புணர்வு முகாம், இயற்கை விவசாய விழிப்புணர்வு, டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு, பனை விதைகள் விதைப்பு முகாம் போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

வேதாரண்யம், ஈகா அறக்கட்டளையின் நிர்வாகியும் சமூக ஆர்வலருமான மோகன இிராஜசேகரன், தோப்புத்துறையில் ஈகா அறக்கட்டளையை தொடங்கி, தாய், தந்தை இல்லாத குழந்தைகளின் கல்விக்கு உதவி செய்வது, சாலையோரத்தில் வசிக்கும் ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு சாலையில் சுற்றி திரிபவர்களுக்கு மூன்று வேளை உணவு வழங்குவது, வேதாரண்யம் மூன்றாம் தெருவில் தைத்தடி முதியோர் இல்லத்தை தொடங்கி ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உறைவிட வசதி ஏற்படுத்தி தருவது, பொதுமக்களிடம் நிதி திரட்டி, பொருளாதார பின்புலம் இல்லாத நலிந்த மக்களுக்கு மருத்துவ உதவி மற்றும் குழந்தைகளுக்கு உயர்தர அறுவை சிகிச்சைக்கான உதவிகளை செய்வது போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

வேளாங்கண்ணி, உதவிக் கரங்கள் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தின் நிர்வாகி ஆண்டனி பிரங்ளின் ஜெயராஜ், தினமும் 100 நபர்களுக்கு ஸ்பான்சர்ஸ் மூலமாக மதிய உணவு வழங்குவது, உதவி கரங்கள் ஆம்புலன்ஸ் சேவை, வேளாங்கண்ணி கடற்கரையில் உதவி கரங்கள் கடல் மீட்பு குழுவினர் மூலம் கடலில் மூழ்கி தத்தளிக்கும் நபர்களை மீட்க உதவி செய்வது போன்ற பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறந்த முறையில் சமூக தொண்டாற்றி வரும் சி. இராஜேந்திரன், மு. வெற்றியழகன், மோகன இராஜசேகரன், ஆண்டனி பிரங்ளின் ஜெயராஜ் ஆகியோரது சேவைகளைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கண்டவராயன்பட்டியில் நடுநிலைப்பள்ளியில் முதல்வரின் காலை உணவு திட்டத்தை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் உள்ளார்.

### ‘தம்பி முதலில் ‘ஸ்வீட்’ சாப்பிடு’ :-

# சிறுவர் சிறுமிகளுடன் தரையில் அமர்ந்து சாப்பிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## பிஞ்சுகளோடு, கொஞ்சி மகிழ்ந்த கலகலப்பான உரையாடல்!

திருவாரூர், ஆக.27-

பள்ளி சிறுவர் - சிறுமிகளுடன் தரையில் அமர்ந்து முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு சாப்பிட்டார். அப்போது, பிஞ்சுகளிடம், கொஞ்சி மகிழ்ந்தபடி கலகலப்பாகவும் அவர் உரையாடினார்.



**‘ஜாலி’ உரையாடல்**

நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள அரசு பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் விரிவாக்கம் செய்து வைத்து, பள்ளி சிறுவர் - சிறுமி களுடன் தரையில் விரிக்க ப்பட்டிருந்த பாயில் அமர்ந்தப்படி உணவு சாப்பிட்டார். சிறுவர் - சிறுமிகளுக்கு கொடுக்கப்பட்ட உணவே, அவருக்கும் பரிமாறப்பட்டது. அப்போது, பக்கத்தில் இருந்த சிறுவர் - சிறுமிகளுடன் மு.க. ஸ்டாலின் அவர்கள் மழலையாக மாறி ‘ஜாலி’யாக உரையாடினார். சிறுவனிடம் ‘தம்பி முதலில் ஸ்வீட் சாப்பிடு’ என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதுடன் தொடங்கும் கலகலப்பான கலந்துரையாடல் வருமாறு:-

மு.க.ஸ்டாலின் : (காலை உணவு) நல்லா இருக்கா?

சிறுமி: ஆம். நல்லா இருக்கு.

மு.க.ஸ்டாலின்: சாப்பிடாமலேயே நல்லா இருக்குனு சொல்ற..

சிறுமி: (சாப்பிட்டப்படி): நல்லா இருக்கு.

மு.க.ஸ்டாலின்: ‘டெய்லி’ ஸ்கூலுக்கு வந்துறீயா? விளையாட்டு எல்லாம் உண்டா? என்ன விளையாடுவாய்?

சிறுமி: கண்ணாம்பூச்சி விளையாடுவேன்.

**என் பெயர் தெரியுமா?**

மு.க.ஸ்டாலின்: நான் யாருனு தெரியுமா உனக்கு?

சிறுமி: ஆம். தெரியும், முதல்-அமைச்சர்

மு.க.ஸ்டாலின்: என் பெயர் என்ன?

சிறுமி: சி.எம். (முதல் - அமைச்சர்)

மு.க.ஸ்டாலின் அவர்கள் (சிரித்தப்படி): என் பெயர் என்னவென்று கேட்கிறேன். சி.எம். என்பது பதவி. என் பெயர் சொல்லு. (பக்கத்தில் இருந்த சிறுவனிடம்) உனக்கு என் பெயர் தெரியுமா?

சிறுவன் : சி.எம்.

மு.க.ஸ்டாலின்: என்னது சி.எம்.மா? பெயர் தெரியாதா?

சிறுவன்: தெரியும். ஸ்டாலின்.

மு.க.ஸ்டாலின்: ‘வெரி குட்’ (பக்கத்தில் இருந்த சிறுமியிடம்) உனக்கு இப்போது தெரியுதா ஸ்டாலின்னு... இந்த ஊர் யார் ஊருன்னு தெரியுமா?

சிறுமி: ஆம் தெரியும். உங்கள் ஊர்.

மு.க.ஸ்டாலின்: எனது அப்பா பெயர் தெரியுமா? கலைஞர் (கருணாநிதி) தான் என்னுடைய அப்பா. இங்கிலீஸ், தமிழ் என என்னென்ன ‘சப்ஜெக்ட்’ நல்லா படிப்பாய்?

சிறுமி: தமிழ்.

**‘வாட்ச்’ ஓடல...**

மு.க.ஸ்டாலின்: நல்லா படிப்பியா? எவ்வளவு மார்க் எடுத்த? ‘டீச்சர்’ நல்லா சொல்லிக்கொடுப்பாங்களா? நன்றாக சாப்பிடு. (மாணவர்களிடம்) கொஞ்சம், கொஞ்சமாக சாப்பிடுங்கள். மெதுவாக சாப்பிடுங்கள். யாரும் பேச மாட்டீர்களா? (பக்கத்தில் இருந்த சிறுவனிடம்) நீ பேச மாட்டீயா? ‘வாட்ச்’ சும்மா ஸ்டைலுக்கு கட்டியிருக்கியா? ‘டைம்’ பார்க்க தெரியுமா? படம் பார்ப்பியா? ‘வாட்ச்’ ஓடல... தம்பி என் ‘வாட்ச்’சை பாரு, ‘டைம்’ என்ன?

சிறுவன்: உங்க ‘வாட்ச்’ல ‘வாட்ச’ல ‘டைம்’ ‘கரெக்டா’ இருக்கு.

மு.க.ஸ்டாலின் (சிரித்தப்படி): சாப்பிடு. (பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தவர்களை நோக்கி) நீங்கள் சாப்பிடவில்லையா? (சிறுமியிடம்) சாப்பிட்டா... ஊட்டி விடட்டுமா? சாப்பாடை உங்க அம்மா ஊட்டி விடுவாங்களா? நீயே சாப்பிடுவியா?

சிறுமி: நானே சாப்பிடுவேன்.

மு.க.ஸ்டாலின்: (அருகே இருந்த மற்றொரு சிறுவனிடம்) ஹலோ உங்க பேரு என்ன?

சிறுவன் : மதிமாறன்.

சிறுவன்: 1ம் வகுப்பு

இவ்வாறு உரையாடல் நடைபெற்றது.

மு.க.ஸ்டாலின் அவர்கள் , சிறுவர் சிறுமியருடன் தரையில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டுவிட்டு, அவர்களோடு பிஞ்சு மொழியில் கொஞ்சி உரையாடிய இந்த காட்சி சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது.




குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் 25.8.2023 அன்று தென் அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டின் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் நில பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் முறைசாரா குடியேற்றங்கள், நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டுவசதி தொடர்பான அனுபவம் குறித்து கலந்து உரையாடப்பட்டது. உடன் சிலி குடியரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறையின் துணை அமைச்சர் திருமதி கேப்ரியேலா எல்குடா (Mrs. Gabriela Elgueta, Hon’ble Deputy Minister for Housing and Urban Development, MINVU), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மீ.தங்கவேல், உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின், (Mrs. Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர் திருமதி யான் எஃப் ஜாங், (Mrs. Yan F Zhang, Senior Urban Specialist World Bank) உட்பட பலர் உள்ளனர்.



கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, குறுவை தொகுப்பு திட்டம் அறிவித்தமைக்காகவும், மேட்டூர் அணையில் குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்து விட்டமைக்காகவும், விவசாயப் பெருமக்களின் நலனிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




நாடாளுமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணி வெற்றி வாகை சூடிட பேருழைப்பு நல்குவோம்!

# தலைவர் கலைஞரின் திரைப்படங்களை நாடு முழுவதும் திரையிடுவோம்!

### கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில - மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

### பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

திருச்சி, ஆக.27-

திருச்சியில் நடைபெற்ற கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு பேரவையின் சார்பில் நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் திரைப்படங்களைத் திரையிடுவது எனவும், கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்களை ஒப்பிக்கும் போட்டிகள் நடத்துவது எனவும் - நாடாளுமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணியின் வெற்றிக்கு பேரவையின் சார்பில் கடும் உழைப்பினை நல்குவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில அளவிலான மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 24.8.2023 வியாழக்கிழமை காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகித்தார் மாநிலச் செயலாளர்கள் பொள்ளாச்சி மா. உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், தில்லை செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநிலத் துணைச் செயலாளர்கள் மதுரை சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், எழில் மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி.குப்பம் சி.கோபி. ஜாகிர் உசேன் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் அனைத்து மாவட்டத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாடு முழுவதும் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களை திரையிடுவது குறித்தும் , பள்ளி மாணவ -மாணவியருக்கு கலைஞரின் திரைக்கதை வசனங்கள் கவிதைகளை ஒப்பிக்கும் போட்டிகள் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட பேரவையின் நிர்வாகிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தலைவர் கலைஞர் திரைப்படங்களை நாடு முழுவதும் திரையிடல்!**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடும் வகையில், கலைஞரின் பகுத்தறிவுச் சீர்திருத்தக் கருத்துகள் அடங்கிய கனல் தெறிக்கும் வசனங்கள் கொண்ட திரைப்படங்களை ஊர் தோறும் பொது இடங்களில், பூங்காக்களில், திடல்களில், பள்ளிகளில் திரையிட வேண்டும் என்று கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைக்கு அறிவுரை வழங்கிய தலைமைக் கழகத்திற்கு பேரவை தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கலைஞரின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவிக்கும் போட்டி!**

வெறும் புராண இதிகாசக் கதைகளை மட்டுமே முன்னிலைப்படுத்தி கதை, வசனங்கள், பாடல்கள் மிகுந்திருந்த தமிழ்த் திரை உலகில், முதன்முதலாக சமூக அரசியல் சீர்திருத்தக் கருத்துகளை தனது அனல் கக்கும் எழுத்துகளால் திரைப்பட உரையாடல்களாக்கி தமிழ்த் திரையுலகில் மாபெரும் கருத்துப் புரட்சியை ஏற்படுத்தியவர் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரின் திரைப்பட வசனங்களை இன்றுள்ள மாணவர் சமுதாயத்திடம் அறிமுகப்படுத்தி பகுத்தறிவு, சீர்திருத்தக் கருத்துகளால் தமிழ் உணர்வையும் தன்மான உணர்வையும் மிளிரச் செய்திட “ கலைஞரின் திரைக்கதை வசனங்கள், கலைஞரின் கவிதைகள் ஒப்புவிக்கும் போட்டி’யை மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சிறப்பாக நடத்தி, வெற்றி பெறும் மாணவர்களுக்கு கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவது எனத்தீர்மானிக்கப்படுகிறது.

**மணிப்பூர்: ஒன்றிய அரசுக்கு கண்டனம்**

“பெண்ணைத் தெய்வமாகப் போற்றுகிறோம், வணங்குகிறோம்” என்று பேசிக் கொண்டே,மணிப்பூர் மாநிலத்தில் கும்கி இனப் பெண்களை நாகரிகமும் மனிதநேயமும் அற்ற முறையில் தெருக்களில் நிர்வாணமாக இழுத்துச் சென்ற சங் பரிவார் கும்பலையும் அவர்களைக் கண்டு கொள்ளாமல் இந்த வன்கொடுமையை வேடிக்கை பார்த்த மணிப்பூர் மாநில அரசையும் மொத்தக் கொடுமைகளுக்கும் காரணமான ஒன்றிய மோடி அரசையும் இப்பேரவை வன்மையாக கண்டிக்கிறது.

அத்துடன் பல மாதங்களாக நடைபெறும் மணிப்பூர் மக்கள் போராட்டத்திற்கு எந்த ஒரு தீர்வும் காண முயற்சிக்காமல் சட்டம் ஒழுங்கு சீர்குலைவைத் தடுக்கும் திறனற்ற வகையில் வேடிக்கை பார்க்கின்றது ஒன்றிய மோடி அரசு. மணிப்பூர் மக்களின் போராட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் முறையான முழுமையான விவாதத்தை நடத்த மறுத்ததோடு அவ் விவாதங்களில் ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்காமல் நழுவிச் சென்றதையும் அம்மக்களின் உணர்வுகளுக்கு எவ்வித மதிப்பும் அளிக்காமல் எதேச்சதிகாரமாக நடந்து கொண்டதையும் இப்பேரவை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

**ஆளுநர் ஆர்.எஸ்.எஸ். ரவியை திரும்பப் பெற வேண்டும்**

தமிழ்நாட்டு மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து ஓ.பி.சி. எஸ்.சி. மாணவர்கள் மற்றும் கிராமப்புற மாணவர்களின் மருத்துவப் படிப்பைத் தடுக்கும் வகையில் ஒன்றிய மோடி அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு, “கடந்த கால அடிமை ஆட்சியாளர்களால்” தமிழ்நாட்டில் நுழைக்கப்பட்ட நீட் தேர்வு இதுவரை 21 தமிழ் மாணவர்களின் உயிர்களைப் பலி வாங்கி உள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய நீதியரசர் ஏகே ராஜன் குழுவை அமைத்து மக்கள் கருத்தைப் பெற்று மாட்சிமை பொருந்திய தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் இயற்றிய பின்னும் அதை சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விரோதமாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் காலந்தாழ்த்தியதோடு நீட் உள்ளிட்ட சமூகநீதிப் பிரச்சினைகளிலும் மாநில உரிமைச் சிக்கல்களிலும் சர்வாதிகார சனாதனவாதியாக நடந்து கொண்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு “சனாதன ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவியை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்” என ஒன்றிய அரசை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி! பாராட்டு!**

நீட் எதிர்ப்பை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று தனது முதல் சட்டமன்ற உரையிலேயே பதிவு செய்ததோடு, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரும் தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானத்திற்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்கக் கோரி தான் ஒரு அமைச்சர் என்றாலும் , மாணவர்களின்நலனை முன்னிறுத்திப் போராட்டக் களத்தை அமைத்து, நாடெங்கும் நீட் எதிர்ப்பலைகளை உருவாக்கியிருக்கிற தி.மு.க.இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் போர்க்குணத்தையும் மக்கள் பற்றையும் கொள்கை உறுதியையும் இப் பேரவை நன்றியோடு பாராட்டுகிறது.

**உச்ச நீதிமன்றத்திற்கு நன்றி!**

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் முயற்சியாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம், பல்வேறு சட்டப் போராட்டங்களில் சிக்கியிருந்த நிலையில் மிகுந்த துணிவோடும், கொள்கை உறுதியோடும் அதனை நடைமுறைப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இப்பேரவை நன்றி பாராட்டுவதோடு, சனாதனவாதிகளால் தொடுக்கப்பட்ட வழக்கினை உச்சநீதி மன்றத்தில் திறம்படக் கையாண்டு அதைத் தள்ளுபடி செய்து நீதியைப் பெற்றிருக்கிற திராவிடமாடல் அரசின் சமூகநீதி முயற்சிக்கு இப் பேரவை தமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறது.

**தளபதியின் வெற்றிக்கு துணை நிற்போம்!**

அகில இந்திய அளவில், நடைபெறுகிற சர்வாதிகார பாசிச மதவெறி சனாதன மோடி ஆட்சியை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றிடும் முயற்சியாக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஓரணியில் திரட்டிடும் பணியில் தீவிரம் காட்டி, I.N.D.I.A இண்டியா கூட்டணியை வெற்றிகரமாகக் கட்டமைத்து ஒன்றிய அரசுக்கும் சங் பரிவார் கும்பலுக்கும் பெரும் சவாலாக விளங்குகிற கழகத் தலைவர், தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் ஆதரவளித்துத் துணை நின்று ஜனநாயகத்தையும் சமூகநீதியையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாத்திடும் வகையில், எதிர்வரும் 2024 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு புதுவையில் 40 தொகுதிகளிலும் கழகக் கூட்டணி வெற்றி வாகை சூடிட பேரவை தமது பேருழைப்பை நல்கிடும் என்று இக்கூட்டத்தில் உறுதியேற்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.




திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் மற்றும் மாநில செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், தில்லை செல்வம் மற்றும் துணைச் செயலாளர்கள் மதுரை சி.வீர கணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி குப்பம் சி . கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் பங்கேற்றனர்.

# பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு ஆபத்தானது!

### இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் அறிக்கை!



சென்னை, ஆக,27-

பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இரு முறை பொதுத் தேர்வு ஆபத்தானது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2020 வழக்கொழிந்து போக வேண்டிய வருணாசிரம, சனாதன கருத்தியலின் நவீன வடிவமைப்பு என்பதால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதனை நிறுத்தி வைத்து, அது தொடர்பான வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இப்போது அந்த வல்லுநர் குழு நீண்ட சில நூறு பக்கங்கள் கொண்ட அறிக்கையை பரிந்துரைகளுடன் வெளியிட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்டுக்கு இரு பொதுத் தேர்வு என்ற புதிய தேர்வு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. இரு முறை தேர்வில் எந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதை மாணவர்கள் அடுத்த நிலைக்கு செல்ல பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதில் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக தெரிவித் திருந்தாலும், உண்மையில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின பழங்குடி மாணவர்களை வடிகட்டி வெளியேற்றும் நோக்கம் கொண்டதாகும். அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா “பிற மொழிகளை (மாநில மொழி தமிழ் நாட்டில் தமிழ்) தாய்மொழியாக கொண்டவர்கள் இந்தி மொழியை எதிர்ப்பின்றி ஏற்க வேண்டும் என்று அகங்காரத்துடன் பேசிய பேச்சுக்கு செயல் வடிவம் தரும் முயற்சியாகும். அரசின் வஞ்சகத் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுக்கு இரு முறை பொதுத் தேர்வு அறிவிப்பை திருப்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. இவ்வாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் 5-9-2023, செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணி அளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி தலைமையில், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு. கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றிட, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை” தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் நடத்துவது - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்: 25-8-2023

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## மக்களின் மனம் கவர்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# நாகை மாவட்ட மக்கள் வழங்கிய வாஞ்சைமிகு வரவேற்பு!
























கலைஞர் 100 1924 - 2023
நாள் : 27.08.2023 - நேரம் : மாலை 4 மணி
இடம் : அரசு மருத்துவக்கல்லூரி சாலை, புதுக்கோட்டை
புதுக்கோட்டை மாவட்ட
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக! வருக!!
எஸ்.ரகுபதி B.Sc., B.L.,
சட்டத்துறை அமைச்சர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
கே.கே.செல்லப்பாண்டியன் M.Com., B.L.,
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க




மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர்,நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

திரு. க.வைரமணி அவர்கள்
திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்

திரு. ந.தியாகராஜன் அவர்கள்
திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்–பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

திருச்சி தெற்கு மாவட்டம்



கழகத்தின் இராணுவம்
இளைஞர் அணியின்
ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்




We Stronger Together

இளைஞர்களின் தலைமை தளபதி
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** அவர்களை

**“நாட்டையும் நாற்பதையும் வென்றெடுக்க”**

*வருக! வெல்க!! என்று வரவேற்கும்...*

திரு. **கே.என்.நேரு** – முதன்மைச் செயலாளர்

திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர்

திரு. காடுவெட்டி **ந.தியாகராஜன்**
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்

திரு. **க.வைரமணி**
திருச்சி மத்திய மாவட்ட செயலாளர்

## மக்களின் மனம் கவர்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# நாகை மாவட்ட மக்கள் வழங்கிய வாஞ்சைமிகு வரவேற்பு!

























காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டிகளில் சீனியர், ஜூனியர் மற்றும் யூத் சாம்பியன்ஷிப்பில், தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தனுஷ் மற்றும் வெள்ளிப்பதக்கம் வென்ற கிஷோரை நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்கூறி வெற்றி பெற்ற 2 வீரர்களையும் பாராட்டும் விதமாக தலா ரூ.50,000 மதிப்புள்ள பரிசுப்பொருட்களுக்கான கூப்பன்களை வழங்கினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் International Track Cycling போட்டியில் பங்கேற்கவுள்ள சைக்கிங் வீராங்கனை கௌரி மிஸ்ராவுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.10 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சைக்ளிங் வீராங்கனை பூஜா ஸ்வேதா, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக Carbon Frame, Carbon Wheel வாங்குவதற்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில், ரூ.12,30,000க்கான காசோலையை நேற்று முன்தினம் வழங்கி வாழ்த்தினார்.



விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்த, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த வகையில், தேசிய படகு போட்டியினை நடத்த Royal Madras Yacht Clubக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.5 லட்சத்துக்கான காசோலையை நேற்று முன்தினம் வழங்கினார்.

### மூன்று அமைச்சர்கள் மீது 'சுயோமோட்டோ' வழக்கு - தி.மு.க. அரசின் மீது மட்டும் இந்த நிலைப்பாடு ஏன்?

# மறு விசாரணைக்கு ஆணையிடும் போதே தீர்ப்பு எழுதலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கேள்வி!



சென்னை, ஆக. 27-

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டீஸ் என்.ஆனந்த வெங்கடேஷ் அவர்கள் கடந்த 23.8.2023 அன்று தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி (Suo moto) வழக்குகளாக, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் அவரது துணைவியார், மற்றொருவர்- முன்பு அவர்களது சொத்துக் குவிப்பு வழக்கினை விசாரித்த கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் முதலிய நான்கு பேர், அதுபோலவே, அதே தேதியில் அமைச்சர் தங்கம் தென்னரசு, அவரது துணைவியார், விசாரணை காவல் துறை அதிகாரி ஆகிய மூவர் - இவர்களை சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து சிறீவில்லிபுத்தூர் நீதிமன்றம் விடுவித்ததை எதிர்த்து 'கிரிமினல் ரிவிஷன் கேஸ்' பற்றி தாமே முன்வந்து ,விடுவித்தது செல்லாது என்று அவ்வழக்கை மீண்டும் விசாரிக்கவேண்டும் என்பதை மய்யமாகக் கொண்டு ஓர் ஆணை - தீர்ப்பு எழுதி யுள்ளார்!

தாமே முன் வந்து விசாரிக்கும் நீதிபதி அதற்கு முன் அமைச்சர் க.பொன்முடி அவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் வேலூர் நீதிமன்றம் விடுவித்தது குறித்தும், அது ஏற்கத்தக்கதல்ல என்று (Suo moto) தாமே முன்வந்து விசாரித்த வழக்கிலும் இதே போல் ஓர் ஆணை - தீர்ப்பு வழங்கி, மறு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தீர்ப்பு தொடங்கும் போதே, தனக்குள்ள அதிகாரம் இதற்காக இருக்கிறது என்று முதல் வாக்கியத்திலேயே முன்னுரையுடன் தொடங்கியிருக்கிறார்.

அது நீதிமன்றத்தின் அதிகாரம் - யாரும் அதைப்பற்றி கேள்வி கேட்கவோ, விமர்சிக்கவோ முடியாது. ஒப்புக் கொள்கிறோம்.

அந்த நீதிபதி அவர்கள் மிகுந்த கற்றறிந்த நீதிபதி; அவரது ஆங்கிலப் புலமை வியக்கத் தக்கது; அதில் மாறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது.

மூன்று டைரக் ஷனில் செயல்பட வேண்டிய ஆணைகள் ஆனால், அந்த தாமே முன் வந்து விசாரிக்கும் வழக்கில், இறுதியாக, 'மூன்று டைரக்ஷனில்' செயல்பட வேண்டிய ஆணைகளைத் தந்துள்ளார்.

1. அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் இதுபற்றி அரசு சார்பில் நோட்டீஸ் எடுத்துக் கொள்ளவேண்டும்.

2. சிறீவில்லிபுத்தூர் தனி நீதிமன்றம் எம்.பி., எம்.எல்.ஏ.,க்கள் வழக்குகளை விசாரிக்கும் கிரிமினல் ரிவிஷன் குற்றம் சுமத்துவோர் நோட்டீஸ் வழக்காக 20.9.2023இல் எடுத்துக்கொண்டு விசாரிக்கவேண்டும். (கிரிமினல் ரிவிஷன் வழக்காக).

3. இந்த ஆணை தலைமை நீதிபதிக்குத் தகவலுக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- இதன்மூலம் மீண்டும் விடுவிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு மறு விசாரணை தொடங்கவேண்டும் என்பது!

இதன்படி வழக்கு மீண்டும் மறு விசாரணைக்கு உத்தரவு என்பதற்கான ஆணையால், நீதிபதி தொடக்கத்திலிருந்து பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்கள் ஒரு நடுநிலைப் பார்வைக்கு முற்றிலும் மாறாக,

கடுமையாக (Harsh) கேலி, கிண்டல், நையாண்டிச் சொற்களை குறிப்பிட்டவர்களைத் தாண்டி, ஆளும் அரசுமீது அதிகார துஷ்பிரயோகம், வழக்குகளை விசாரித்த மேனாள் தலைமை நீதிபதி மற்றும் சக நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள் அத்துணை அமைப்புகள் பொறுப்பாளர்கள் மீதும் சேற்றை வாரி இறைப்பதாக இருப்பது, அதுவும் விசாரிக்க உத்தரவிடும் நோட்டீஸ் ஆணையில், விசாரணையையே முடித்து அத்துணை பேரும் தத்தம் கடமைகளிலிருந்து தவறியவர்கள், நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைந்துள்ள அரசு இயந்திரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டே இவர்கள் விடுவிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்று இறுதித் தீர்ப்பை - இதற்குக் காரணமான அத்துணைப் பேரையும், சென்னை உயர்நீதி மன்றம், எல்லோரின்மீதும் குற்றப் பத்திரிகையை எழுதி வாசிப்பதுபோலவே, அதன் வாசகங்கள் அமைந் துள்ளது நியாயமான அணுகுமுறையா? சட்ட நியாயமா?

கிரிமினல் வழக்குகளில் சந்தேகத்திற்குப் பலன் எப்போது - விசாரணைகளில் (Benefit of doubt) குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பக்கம் தானே செல்லும் என்பது கிரிமினல் சட்ட பாலபாடம். அதை நன்கு அறிந்த மாண்பமை நீதிபதி அவர்கள், எப்படி மற்றவர்கள் முடிவுக்கு உள்நோக்கம் - உள் ஆதாயம் - அரசுத் துறைகளின் துஷ்பிரயோகம் என்பதை ஆதாரங்களைக் காட்டாமல், வெறும் யூகத்தின்மீது, "புதிய அரசாங்கம் அமையும்வரை இழுத்தார்கள்" என்று கூறுவது முதிர்ச்சி பெற்ற நியாயத்தின் வெளிப்பாடாக அமையுமா?

எடுத்துக்காட்டாக, அமைச்சர் பொன்முடி வழக்கில் பல செய்திகளை எழுதிய இந்த நீதியரசர், விழுப்புரம் நீதிமன்றத்திலிருந்து, வேலூர் நீதிமன்றத்திற்கும் மாற்றப்படுவதற்குரிய காரணங்கள் பற்றி - விழுப்புரம் நீதிமன்ற நீதிபதியிடம் பணம் கொடுத்து வழக்கை முடிக்க முயலுகிறார்; ஆகவே, வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுங்கள் என்று அ.தி.மு.க. லெட்டர் பேடில் கடிதம் எழுதப்பட்டதைப்பற்றியும், அதனால் அது மாற்றம் அடைந்தது என்றும் பேசப்படும் நிலையில், தனது விரிவான அலசும் தீர்ப்பில், ஏன் அதனைக் குறிப்பிடாமல், வெறும் மாற்றம் ஏதோ அரசின் செல்வாக்கினால் அமைந்தது! விருப்பத்தினால் மாற்றப்பட்டது என்பதுபோல புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்?

அதுமட்டுமல்ல, மேனாள் தலைமை நீதிபதி இருக்கையில், இவருக்கு இந்த அதிகாரம் - பொறுப்பு (கிரிமினல் துறை) வரவில்லையா? நீதியின் மேன்மை கருதி, அவருக்கே ஏதாவது கடிதமோ அல்லது நீதிபதிகள் கூட்டும் கூட்டத்திலோ "நீதி தேவன் மயக்கங்களை" தடுத்து, நீதித்துறையை தூய்மையாக்க முயன்றுள்ளாரா என்பது மக்கள் மன்றம் அறிய வேண்டியது கடமை.

பல பத்திகள் Cut - Paste - வழமைதான்.

ஒரே நாளில் தரப்பட்ட (23.8.2023) இரண்டு தீர்ப்புகளிலும் ஒரே மாதிரி வாசகங்கள்; பத்தி வாரியாக காணப்படுகின்றன.

பொதுத் தேர்தல் விரைந்து வரவிருக்கும் சூழ் நிலையில், தமிழ்நாடு அரசின்மீது இப்படி ஒரு தார் வர்ணம் பூசிக் காட்டுவதற்கு, அதுவும் 'நோட்டீஸ்' அனுப்பும் முன்பே, போதிய விசாரணை நடக்கும் முன்பே தீர்ப்பு எழுதப்படுவது நியாயமா? அரசைக் கேவலப்படுத்துவது ஏற்புடையதா?

புதுச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற சங்கரராமன் கொலை வழக்கில் ஏ1, ஏ2 குற்றம் சுமத்தப்பட்டவர்களான காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரர் ஆகியோர் மொத்தம் 189 சாட்சியங்களில் 83 பிறழ் சாட்சியங்கள் காரணமாகவே அக்கொலைக் குற்ற வழக்கிலிருந்து (மாவட்ட நீதிபதியிடம் தொலைபேசிப் பேச்சு புகார் உள்ளது) விடுதலையானார்களே, அந்த குற்ற வழக்குகளை - குற்ற வழக்குகளுக்கு லிமிட்டேஷன் ஒன்றும் கிடையாது என்ற நிலையில், கிரிமினல் வழக்கு அதிகார நீதிபதி அவர்கள் இதுவரை ஏன் சம்பந்தப்பட்ட வழக்கில் தாமே முன்வந்து விசாரிக்க ஆணையிட்டிருக்கவில்லை?

தி.மு.க.மீதும், தி.மு.க. அரசுமீதும் மட்டும் பாய்வது ஏன்?

குறிப்பாக தி.மு.க.மீதும், தமிழ்நாடு அரசின்மீதும் அதன் அமைச்சர்கள்மீதும் மட்டும் ஏன் பாய்கிறது என்ற கேள்வி மக்கள் மன்றத்தில் எழச் செய்யுமே!

பல மேனாள் ஆளுங்கட்சி அமைச்சர்கள் மீதுள்ள வழக்குகள் குறித்து இதே வேகம் வந்திருக்கவில்லையே என்று நோக்கும்போது, இது ஒருதலைப்பட்ச நோக்கம் போன்றே எவருக்கும் எண்ண தோன்றும்!

இந்த மறுவிசாரணை ஆணை மற்ற பல அரசுத் துறைகள்மீது - சென்னை உயர்நீதி மன்ற மேனாள் நீதிபதிகள் முதல், இந்நாள் நீதிபதிகள் வரை குற்றம் சுமத்தி, நீதித் துறை, நிர்வாகத் துறை, ஆட்சி மீது மக்கள் நம்பிக்கையை இழக்கச் செய்யாதா?

அதுவும் முழு மறுவிசாரணைக்கு முன்பே முடிவுக்கு வந்ததுபோல் இப்படி எழுதுவது - நீதிமன்றத்தில் மனு தர்மம் கோலோச்சத் தொடங்கி விட்டதோ என்று தான் எண்ணம் எவருக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததே!

நீதிமன்றங்களுக்குரிய மாண்பைக் காப்பாற்றவும், அவற்றின்மீதுள்ள நம்பிக்கையைக் குறைக்கும் அல்லது குலைக்கும் வகையில் தீர்ப்புகளோ, ஆணைகளோ வந்தால், அது பொதுநலக் கண்ணோட்டப்படி விரும்பத் தக்கதா?

"வெறுப்பு அரசியல் பிரச்சாரம் கூடாது; அது தடுத்துநிறுத்தப்பட வேண்டும். சட்டத்தின் மாண்புநிலை நிறுத்தப்பட வேண்டும்" என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறும் நிலையில், "வேலியே பயிரை மேய்வதைப் போல" இப்படி உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களே இப்படி ஒரு ஆட்சி மீது வெறுப்பு - நீதிபதிகள் மீதே வெறுப்பு ஏற்படுத்தும் பிரச்சாரம் ஏற்பட வழி வகுக்காதா? மறு விசாரணைக்கு முன்பே தண்டனைத் தீர்ப்பு எழுதி விடுவது நீதித்துறைக்கு ஏற்ற மரபா - நீதிமன்ற வரலாற்றிற்கும் பெருமை சேர்ப்பதாகுமா? என்ற கேள்வியில் இத்தகைய தொடர் மூன்று 'திரிசூல' ஆணைகள்மீது எழும்புவது தவிர்க்க முடியாததே!

'சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக' இருக்கவேண்டும் என்ற வரிகளை நீதிபதிகள் அடிக்கடி எழுதுவார்கள். அதை இப்போது இங்கே பயன்படுத்தி, இந்த விசாரணைக்குமுன் தீர்ப்பு எழுதியுள்ள கொடுமையைக் கண்டு, வேதனையும், அதற்கு உடனடியாக பரிகாரமும் வந்தால் மட்டுமே நீதிமன்றக் கறைகள் துடைக்கப்பட முடியும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பவானிசாகர் சட்டமன்ற முன்னாள் கழக உறுப்பினர்

# வி.ஏ.ஆண்டமுத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.27–**

**பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் வி.ஏ. ஆண்டமுத்து அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செய்தி வருமாறு :-

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் கழகத்தின் மூத்த செயல்வீரருமான வி.ஏ. ஆண்டமுத்து அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

கழகத்தின் மீதும், தலைவர் கலைஞர் மீதும் மிகுந்த பற்று வைத்திருந்த அன்னாரது மறைவு பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், கழகத்தினர் மற்றும் பவானிசாகர் தொகுதி மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி பள்ளிகொண்டா பேரூராட்சி வேப்பங்கால் அரசு தொடக்கப் பள்ளியில் நந்தகுமார் எம்.எல்.ஏ. காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து பள்ளி குழந்தைகளுடன் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பே.சா.து.ந.க.எண்.பி3 / 4393 / 2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**சிங்கார சென்னை 2.0**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 1, 2, 13 & 15 உள்ள 109 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலை, ILP & பேருந்து சாலைகளில் தார், சிமென்ட் சாலைகள் மற்றும் நடைபாதைகள் மேம்படுத்தும் பணி (சிப்பம் 1 மற்றும் 2 வரை) (சிங்கார சென்னை 2.0 திட்டம்) 2023-24 | 1 மற்றும் 2 | குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.931.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.981.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **13.09.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **14.09.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4758 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

**பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பே.சா.து.ந.க.எண்.பி3 / 4392 / 2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**SFC (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 551 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமென்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள், சாலை பிரிப்பான், மற்றும் பேருந்து சாலைகள் மற்றும் நடைபாதை பணிகள் மேம்படுத்தும் பணி SFC (2023-24) | 1 முதல் 11 வரை | குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.752.00 இலட்சங்கள் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.778.00 இலட்சம் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **13.09.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **14.09.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4757 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

தமிழ்நாடு அரசு

**நீர்வளத்துறை - நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.**

**மொத்த தொகை ஒப்பந்தமுறை - இனவிலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை ஒப்பந்த வழி முறை)**

கலைஞர் 100 1924 - 2023

**மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 03 / 2023-2024 / வஅ1 / ந.கா.வ.வ / திருச்சி / நாள் 24.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னனு (E-Tender) வழியாக உரிய வகுப்பில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த மற்றும் பாசன கட்டுமான பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்த காலம் (மழைக் காலம் உட்பட) | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் இறுதி நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சி | | | | | | |
| 1 | நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமத்தில் காட்டுப்புத்தூர் ஊட்டு வாய்க்காலினைப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணி | 999.99 | 5,10,500 | 24 மாதங்கள் | 03.10.2023 3.00 பிற்பகல் வரை | 04.10.2023 3.00 பிற்பகல் முதல் | வகுப்பு - I ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில் அல்லது பொதுப்பணித்துறையில் இதற்கு சமமான |
| 2 | திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், நகர் கிராமத்தில் மேல் பங்குனி வாய்க்காலின் குறுக்கே இடைநிலை நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி | 1460.35 | 7,41,000 | 24 மாதங்கள் | 03.10.2023 3.30 பிற்பகல் வரை | 04.10.2023 3.30 பிற்பகல் முதல் | வகுப்பு - I ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில் அல்லது பொதுப்பணித்துறையில் இதற்கு சமமான |

ஒப்பந்தப்புள்ளிகளை 04.09.2023 முதல் **https://www.tntenders.tn.gov.in** என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விபரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதி முறைகளை பார்க்கலாம். மேலும் கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம். அனைத்து திருத்தங்கள் / கால நீட்டிப்பு / மாற்றங்கள் ஏதாவது இருப்பின், மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**செ.ம.தொ.இ / 4742/ ஒப்பந்தப்புள்ளி /2023**

**கண்காணிப்புப் பொறியாளர், நீவது**
**நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.**



அருப்புக்கோட்டை வட்டம் பாலவநத்தம் கிராமத்தில் ஊராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தினை வருவாய்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சார துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் கலந்து கொண்டார்.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் முதலமைச்சரின்

# காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஆக.27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (25.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநில முழுவதும் விரிவாக்கம் செய்து, திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணா மலை ஊராட்சி ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி, அம்மன் நகரில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுக்கு உணவு பரிமாறி மாணவிக்கு உணவினை ஊட்டிவிட்டு பேசியதாவது:

முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் திராவிட மாடல் என்னும் சிறப்பான ஆட்சி செய்துவருகிறார். மேலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் இரண்டாம் கட்டமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் 860 ஊராட்சிகளில் 18 ஒன்றியங்கள் 4 நகராட்சிகள் 10 பேரூராட்சிகள் உள்ளன. அதேபோல் உணவு சமைப்பது பரிமாறுவது அம்மாக்களின் வேலை அதற்கு தகுந்தர்போல் அம்மன் நகரில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. மேலும் காலை உணவு திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அவர் படித்த பள்ளிக்கூடத்தில் இந்த திட்டம் இன்று முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டதை நேரலையாக ஒளிப்பரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியின் வாயிலாக இத்திட்டத்தை பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு அறியும் வகையில் பல கருத்துகளை எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் 110 விதி கீழ் 1முதல் 5 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் துவங்கப்படும் என (07.05.2022) அன்று அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக (15.09.2022) அன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கப்பட்டது. அன்று நான் முதல்வருடன் மதுரையில் இருந்தேன். முதல் கட்டமாக 1545 பள்ளிகளில் 1 இலட்சத்து 15 ஆயிரத்தி 92 மாணவ, மாணவிகள் பயனடைந்தனர். இத்திட்டத்தை கூடுதலாக அப்போழுதே தொடங்கியிருக்கலாம். ஏன் என்றால் அப்பொழுது நம்மிடம் போதுமான நிதியில்லை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் நம் மாநில கடனாக ரூ.6 இட்சத்து 25 ஆயிரம் கோடி கடனில் விட்டு சென்றார்கள். இதற்கு மட்டும் மாதம் ரூ.48 ஆயிரம் கோடி வட்டி மட்டும் தமிழக அரசு செலுத்தி வருகிறது. இதையெல்லாம் சமாளித்து தற்போது இத்திட்டத்தை அறிவித்து முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். மேலும் இரண்டாம் கட்டமாக 31 ஆயிரத்து 800 பள்ளிகளில் 17 இலட்சம் மாணவ, மாணவிகள் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகின்றனர். முன்பு ஆட்சி பொறுப் பில் இருந்தவர்கள் கடன் ஒருபக்கம், நிதி சுமை ஒருபக்கம் இதனையெல்லாம் சரிசெய்து ஆற்றல் மிக்க முதலமைச்சராக சாதனைபுரிந்து வருகிறார். நமது திருவண்ணா மலை மாவட்டத் தில் முதற்கட்டமாக 75 பள்ளிகளில் 4 ஆயிரத்து 522 மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். இரண்டாம் கட்டமாக 18 ஒன்றியங்கள் 10 பேரூராட்சிகள் 2 நகராட்சிகளில் 1552 பள்ளிகளில் 47 பேரூராட்சி பள்ளி 17 நகராட்சியில் பள்ளிகள் என மொத்தம் 87,842 மாணவ, மாணவிகள் இரண்டாம் கட்ட காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகின்றனர். நமது முதலமைச்சர் அவர்கள் தாய்மார்களின் சுமையை குறைக்கும் விதமாக இந்த காலை உணவு திட்டத்தை அறிவித்தார்கள். விவசாய வேலைக்கு செல்லும் தாய்மார்கள், 100 நாள் வேலைக்கு செல்லும் தாய்மார்கள் என யாரும் இனி கவலை கொள்ள வேண்டாம். தமிழ்நாட்டிலே முதன் முதலாக நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் 100 நாள் வேலை திட்டத்தை அறிமுகம் செய்தார்கள், தாய் உள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் அவர்களால் தான் காலை உணவு திட்டம் என்னும் மாபெரும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் வாரத்திற்கு ஐந்து முட்டை வழங்கும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டது தாயுள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் கருணை உள்ளதோடு காலை உணவு திட்டம் கொண்டு வந்துள்ளார். காலை உணவு திட்டம் காலை 7:00 மணி முதல் செயல்படும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்கள் அலுவலகம் மற்றும் வீட்டிலிருந்தே இத்திட்டத்தின் செயல்படுகளை தினந்தோறும் இருந்த இடத்திலிருந்து கவனிக்க தனி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. ஏதாவது நிறை குறை இருப்பின் சம்மந்தபட்ட அலுவலர்களிடம் கூறலாம். இது ஒரு நவீன புரட்சி இத்திட்டத்தில் உணவு சுவையாக இருக்க வேண்டும், கடமையாக இருக்ககூடாது, உணவின் தரம் குறையக்கூடாது, இந்த திட்டத்தை யாரிடம் கொடுக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் யோசித்தபோது மகளிர் சுய உதவி குழுக்களிடம் வழங்கலாம். ஏன்னெனில் மகளிர் சுய உதவிக்குழு தருமபுரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் இத்திட்டம் துவங்கப்பட்டது. அப்போது துணை முதல்வராக இருந்தபோது 4 1/2 மணி நேரம் கால்கடுக்க நின்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நலத்திட்டங்கள், விருதுகள் வழங்கி நமது முதல்வர் அவர்கள் ஊக்கப்படுத்தினார். நமது முதல்வர் அவர்கள் உணவு சுவையாக தரமாக இருக்க வேண்டும் என்று யோசித்து மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைத்துள்ளார். ஆகையால் சகோதரிகளே முதலமைச்சரின் எண்ணத்தை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நேரலையில் நேற்று முதல்வர் கூறிய செய்திகளில்; பல அர்த்தங்கள் உள்ளடங்கியுள்ளது. அதை நான் உங்களுக்கு சுருக்கமாக கூறுகிறேன். ஊர்களில் தெருக்கூத்து நடக்கும் அதிலும்; குறிப்பாக மகாபாரத தெருக்கூத்துக்களுக்கு பெயர்கள் உண்டு அதில் துரோணாச்சாரியார் கதாபாத்திரம் உண்டு அதில் அவர் பூணூல் அணிந்து வரும் கதாபாத்திரம்; ஏகலைவன் என்ற சாதாரண ஏழை மாணவருக்கு பூணூல், கீபாச்சி அணியாத ஏகலைவனுக்கு உனக்கு வில்வித்தை பயிற்சி அளிக்க வேண்டும் என்றால் உனது கட்டை விரலை வெட்டிக் கொடு என்று குருதட்சணையாக கேட்டார். கட்டை விரல் இல்லை என்று சொன்னால் வில்லில் அம்பை ஏற்ற முடியாது அவன் கற்ற வில்வித்தை எல்லாம் வீணாகிவிடும் எனவே இந்த கதையின் சுருக்கம் முதல்வர் கூறியது இன்று துரோணாச்சாரியார் காலம் எடுபடாது ஏகலைவன் காலம் தான் எடுபடும் என்று கூறினார் அதற்கு அர்த்தம் சாதாரண மக்களுக்கு அனைவருக்கும் கல்வியும் உரிமையும் கிடைக்கும் என்று பொருள் அதாவது திராவிட அரசியலில் பெரியார்,அண்ணா தலைவர் கலைஞர் அவர்களை தவிர வேறு எந்த திட்டமும் எடுபடாது ஏன் என்றால் இது திராவிட மண். தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரத்தில் சாதாரண இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் தமிழ் வழி கல்வி பயின்ற அப்துல் கலாம் அவர்கள் இஸ்ரோ விற்கு பெயர் பெற்று தந்தார், குடியரசு தலைவராகவும் இருந்தார் சந்திராயன்1 அதை தயாரித்தார் தமிழர் மயில்சாமி அண்ணாதுரை அவரும் அரசு பள்ளியில் பயின்றவர் சந்திரன்2 உருவாக்கியவர் வனிதா முத்தையன் அவரும் தமிழ்வழி அரசு பள்ளியில் பயின்றவர் தற்போது சந்திராயன் 3 உருவாக்கி வெற்றியடைய செய்தவர் வீர முத்துவேல் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் தமிழ் வழி கல்வி படித்து தற்போது சாதனை படைத்துள்ளர்கள் எனவே சந்திராயன்3 வெற்றி அடைய செய்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த அரசானது பெண்கள் பயன்பெறும் வகையில் புதுப்பெண் திட்டம், தமிழ்வழியில் கல்வி பயின்ற மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கி வருகிறது. வேலைக்கு செல்லும் மகளிருக்கு கட்டணமில்லா இலவச பேருந்து பயணம் வழங்கி வருகிறது. அதேபோல் மாநிலம், மாவட்டம், மாநகராட்சிகளில் கல்வி தரத்தை உயர்த்த வேண்டுமென பல கல்லூரிகளை வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் இப்படி எண்ணற்ற திட்டங்களை நமது திராவிட மாடல் அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.மு.பிரிய தர்ஷினி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ. ரிஷப், தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம் இரா.ஸ்ரீதரன், முதன்மை கல்வி அலு வலர் கணேசமூர்த்தி, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் சையித் சூலைமான், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) கோபால்கிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் திருமதி.கலைவாணி கலைமணி, ஒன்றிய குழு துணை தலைவர் ரமணன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஆர்.மந்தாகினி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரிதிவி ராஜன், அருணாச்சலம், வட்டாட்சியர் திருமதி.சரளா, கொளக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. உஷா சௌந்தர்ராஜன், கொளக்குடி ஊராட்சி மன்ற துணை தலைவர் சின்னதுரை, ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.வசந்தா பழனி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (25.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்து, திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி, அம்மன் நகரில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை ஒன்றிய குழு தலைவர் திருமதி.கலைவாணி கலைமணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருச்சி மாவட்டத்தில் ரோந்துப்பணியின் போது சாலைவிபத்து: உயிரிழந்த

# தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**நாகை, ஆக. 27 - திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரோந்து பணியின் போது ஏற்பட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அவ்வறிவிப்பு வருமாறு:-

திருச்சி மாநகர், அரியமங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த ஸ்ரீதர் (வயது 45) கடந்த 30.7.2023 அன்று அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் தலைமைக் காவலர் ஸ்ரீதர் உயிரிழந்திருப்பது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

தலைமைக் காவலர் ஸ்ரீதர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை ரயில் நிலையத்தில் சுற்றுலா ரயில் பெட்டியில் தீ விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - தலா ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

நாகை, ஆக. 27 - மதுரைஇரயில்நிலையத்தில் சுற்றுலா இரயில் பெட்டியில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

உத்திரப் பிரதேச மாநிலம் சித்தாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு வந்த ஆன்மீக சிறப்பு சுற்றுலா இரயிலில் நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து கூடுதலாக பெட்டிகள் இணைக்கப்பட்டு மதுரை இரயில் நிலையத்தில் நேற்று (26.8.2023) அதிகாலை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் அதில் பயணித்த பயணிகள் சமையல் செய்துகொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

மதுரை மாவட்ட ஆட்சியரை உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் சென்று உரிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், காயமடைந்தவர்களுக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களது சொந்த ஊர்களுக்குக் கொண்டுசெல்ல தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்குதலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோரை சம்பவ இடத்திற்கு நேரில் சென்று தேவையான உதவிகளை செய்திடுமாறும் கேட்டுக்கொண்டேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.ஆர். ராமதாஸ்
ஆகஸ்ட் 27 (2016)



இளமைக் காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கைத்தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


வேலூர் மாவட்ட தி.மு.க.

# வேலூர் மாநகர தி.மு.க. அனைத்து அணிகளுக்கான விருப்பமனு பெறுதல்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிக்கை!

வேலூர், ஆக. 27 -

வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகத்தில் தற்போது மாநில, மாவட்ட அணிகளுக்கான நிர்வாகிகள் நியமிக்கபட்ட தேர்வு பட்டியல் வெளிவந்தவண்ணம் உள்ளது. இதனை தொடர்ந்து வேலூர் மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட வேலூர் மாநகர அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் நியமனத்திற்கான விருப்பமனு இன்று (27.8.2023 -ஞாயிற்றுக்கிழமை) காலை 09.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் மாநகர செயலாளரும், வேலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் பெற்றுக்கொள்ளப்படும்.

அணிகளின் விவரம்: மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, தொண்டர் அணி, மகளிர் தொண்டர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, வர்த்தகர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுனர் அணி, அயலக அணி எனவே, வேலூர் மாநகரத்திற்கு உட்பட்ட 13 பகுதிகள் மற்றும் 60 வார்டு கழகத்தைச் சேர்ந்த விருப்பமுள்ள கழக உடன்பிறப்புகள் விருப்பபடுகிற அணிக்கான உரிய விருப்பமனுவை மாநகர தி.மு.க. அலுவகத்தில் பெற்றுக் கொண்டு விண்ணப்பத்தில் கேட்கப்படும் விவரங்களுடன் பூர்த்தி செய்து சமர்ப்பித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

பசிப்பிணி என்பதையே அறியக்கூடாது!

# அறிவுப்பசி ஒன்றே மாணவச் செல்வங்களுக்கு வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 27 –**

**இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப்பதிவில், “மாணவச் செல்வங்கள் பசிப்பிணி என்பதையே அறியக் கூடாது! அறிவுப்பசி ஒன்றே மாணவச் செல்வங்களுக்கு வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

திருக்குவளையின் இன்றைய காலை, வரலாற்றின் புதிய தொடக்கம்!

நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி 2021 வரை மதிய உணவுத் திட்டங்களே இருந்தன. நூறாண்டுகள் கடந்து காலை உணவுத் திட்டம் தொடங்கியுள்ளோம். இந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் பசியாற்றவுள்ளது.

எனது அழைப்பை ஏற்று, தங்களது பகுதிகளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் நன்றி!

பசிப்பிணி என்பதையே மாணவச் செல்வங்கள் அறியக்கூடாது!


அறிவுப்பசி ஒன்றே அவர்களுக்கு வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

# எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பெருமிதம்!



*சென்னை, ஆக. 27 -*

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம் காலை உணவுதிட்டம்என வைகோ பெருமிதத்துடன் கூறினார்.

அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ காலனியில் உள்ள சென்னை மாநகராட்சி, நடுநிலை பள்ளியில் காலை உணவு திட்டத்தை ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ நேற்று தொடங்கி வைத்தார். பின்னர், அவர் மாணவ, மாணவியர்களுடன் ஒன்றாக அமர்ந்து காலை சிற்றுண்டி சாப்பிட்டார். அவருடன் மாமன்ற உறுப்பினர் அதியமான் உடனிருந்தார்.

பின்னர், வைகோ அளித்த பேட்டி:

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்துள்ளார். ஏழை எளிய குடும்பத்தின் பிள்ளைகள் சரியான சாப்பாடு இல்லாமல் காலையிலேயே பட்டினியாக பள்ளிக்கு வந்து மயங்கி விழுந்த மாணவர்களை கண்ட முதலமைச்சர் அவர்களுக்காக காலை உணவு திட்டத்தை கொண்டு வந்துள்ளார். மதம், ஜாதி, கட்சி அனைத்தையும் கடந்து அத்தனை பிள்ளைகளுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று மனிதாபிமானத்தோடு இந்த திட்டத்தை கொண்டு வந்துள்ளார்.

செப்டம்பர் 15ம் தேதி நடைபெற உள்ள மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. நீட் தேர்வை ரத்து செய்ய கையெழுத்து இயக்கம் நடத்தி ஜனாதிபதியிடம் வழங்கி உள்ளோம். ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டிற்கு கேடு செய்யும் வகையில் அகந்தையுடன் பேசி வருகிறார். எனவே ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு

# 3 சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் சூட்டுவதா?

## தயாநிதி மாறன் எம்.பி.கடும் எதிர்ப்பு!



*டெல்லி, ஆக. 27-*

ஒன்றிய அரசு 3 சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் சூட்டியுள்ளதற்கு தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மசோதாக்களுக்கு இந்திப் பெயர் வைத்துள்ளதற்கு நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எதிர்ப்பு தெரிவித்தார். அதன்படி, இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், சாட்சிய சட்டத்துக்கு பதில் புதிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 சட்டங்களுக்கு பதில் பாரதிய நகரிக் சுரக்சா சன்ஹிதா, பாரதிய நியாய சன்ஹிதா, சாட்சிய மசோதா என பா.ஜ.க. பெயர் வைத்துள்ளது. ஒன்றிய அரசு சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் வைத்துள்ளது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 348க்கு எதிரானது.

நாடாளுமன்ற நிலைக் குழு கூட்டத்தில் 36 மசோதாக்கள் பற்றி உள்துறை செயலாளர் அஜய் பல்லா விளக்கிக் கூறினார் என்று தயாநிதி மாறன் குறிப்பிட்டார். தொடர்ந்து, 3 மசோதாக்களில் உள்ள குறைகள், இந்தி பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் 3 பக்க கடிதத்தையும் தயாநிதி மாறன் அளித்தார். இந்தி பேசாத தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது இந்தியை திணிக்கும் மசோதாக்களை எதிர்ப்பதாக தயாநிதி மாறன் கூறியுள்ளார். கருணை மனுக்கள் மீது குடியரசுத் தலைவர், ஆளுநர்கள் முடிவெடுக்க காலக்கெடு விதிக்காததற்கும் தயாநிதி மாறன் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

எழும்பூர் 58வது வார்டில் உள்ள அரசுப் பள்ளிகளில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## திருமதி இராஜேஸ்வரி எம்.சி. துவக்கி வைத்தார்!

*எழும்பூர், ஆக. 27-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புரட்சி திட்டமான முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தலைவர் சென்னை பெரு நகர வளர்ச்சி ஆணையம் பி.கே.சேகர் பாபு வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் 58 வது வார்டில் வி.கே. பிள்ளை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி அவதான பாப்பையா ரோடு 3 சென்னை நடுநிலைப் பள்ளி அவதானபாப்பையா ரோடு 72 சென்னை நடுநிலைப் பள்ளி மற்றும் வைக்கக்காரன் தெரு சென்னை நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் புரட்சி திட்டமான முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் மூலம் காலை சிற்றுண்டியை மாணவ மாணவியர்களுக்கு 58 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீதர் வழங்கினார். இதில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் பகுதி செயலாளர் வி.சுதாகர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ். எம் நாதன், செயலாளர்கள் ஆர்.பாபு, வி.விஜயகுமார், பகுதி பொருளாளர் ஜெகதீசன், வட்டக் கழக நிர்வாகிகள் பன்னீர்செல்வம், ச.குமார், ரவி, ரவிச்சந்திரன், கோபாலகிருஷ்ணன், துரை, நவீன் குமார், ரூபேஷ் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| 27-08-2023 ஞாயிற்றுக்கிழமை | | |
|---|---|---|
| காலை 10.15 மணி | எஸ்.ஆர். திருமண மண்டபம், பட்டுக்கோட்டை | பழஞ்சூர் செல்வம் இல்லத் திருமண விழா |
| காலை 11.00 மணி | கே.கே.டி திருமண மண்டபம், பட்டுக்கோட்டை | பரமேஸ்வரன் இல்லத் திருமண விழா |
| காலை 11.50 மணி | மாலியக்காடு, பட்டுக்கோட்டை | மாவட்டத் துணைச் செயலாளர் ரமேஷ் இல்ல புதுமனைப் புகுவிழா |
| நண்பகல் 12.30 மணி | கோமள விலாஸ், பட்டுக்கோட்டை | தஞ்சை தெற்கு மாவட்டக் கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குதல் |
| மாலை 5.00 மணி | மருத்துவக் கல்லூரிச் சாலை, புதுக்கோட்டை | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| இரவு 7.00 மணி | கலைஞர் அறிவாலயம், திருச்சி | திருச்சி வடக்கு, தெற்கு & மத்திய மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| 28-08-2023 திங்கள்கிழமை | | |
| காலை 11.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| இரவு 7.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, பெரம்பலூர் | அரியலூர் & பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| 29-08-2023 செவ்வாய்க்கிழமை | | |
| காலை 10.30 மணி | கழுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

**அன்பகம்,** சென்னை – 18.

நாள் : 25–08–2023.

# அ.தி.மு.க. குப்பையும்...விஷப்பாம்பு பா.ஜ.க.வும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் குட்டிக்கதை!



*தஞ்சாவூர், ஆக. 27-*

அ.தி.மு.க. என்ற குப்பையை ஒழித்தால்தான் விஷபாம்பு என்ற பா.ஜ.க.வை ஒழிக்க முடியும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். தஞ்சாவூர் திலகர் திடலில் தஞ்சாவூர் மாவட்ட வடக்கு - மத்திய - தெற்கு தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தலைமையில் நடந்தது.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: கடந்த 20ம் தேதி தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தப்பட்டது. இந்த போராட்டத்திற்கு அ.தி.மு.க.விற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் நீட் தேர்வை எதிர்ப்போம் என சொல்லிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க., இதற்கு ஆதரவு தரவில்லை. நீட் தேர்வை எதிர்ப்போம் என சொல்லி கொண்டிருக்கும் அ.தி.மு.க. வுடன் கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க.வை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது. 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளை விரட்டி அடிப்போம். அப்போது உதயநிதி ஸ்டாலின் ஒரு குட்டிகதை சொன்னார். ஒரு வீட்டிற்கு அடிக்கடி விஷபாம்பு வந்து கொண்டிருந்தது. அதனை அடித்து வெளியே போட்டாலும், மீண்டும் மீண்டும் வீட்டிற்குள் வந்தது. வீட்டிற்கு வெளியே வந்து பார்த்த போது தான் குப்பை கிடந்தது தெரியவந்தது.

குப்பைக்குள் ஒளிந்து கொண்டு தான் பாம்பு வீட்டிற்குள் வந்திருக்கிறது. குப்பையை ஒழித்தால்தான் பாம்பை ஒழிக்க முடியும். அதேபோல் வீடு என்பது தமிழ்நாடு. குப்பை என்பது அ.தி.மு.க. விஷப்பாம்பு பா.ஜ.க.. எனவே அ.தி.மு.க. என்ற குப்பையை ஒழித்தால் தான் விஷப்பாம்பு என்ற பா.ஜ.க.வை ஒழிக்க முடியும். 2021ம் ஆண்டு தேர்தலில் தமிழகத்தில் இருந்த அடிமைகளை துரத்தி அடித்தது போல், 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளையும், அவர்களின் எஜமானர்களையும் துரத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம்!

# மாநில பொதுக்குழுக் கூட்டம்!

## மாநில தலைவர் ரெ.தங்கம் அறிவிப்பு!

*சென்னை ஆக.27-*

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு கூட்டம், இன்று (27.8.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணியளவில் சென்னை தி.நகர் தீரர் ஜெ.அன்பழகன் நினைவகம்,சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிர்வாகிகள் மறுசீரமைக்கப்பட்டு, புதிய மாநில தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், துணை பொதுச்செயலாளர்கள், மாநில தகவல் தொடர்பு செயலாளர், மகளிர் அணி செயலாளர், துணை செயலாளர்கள், மாநில பொதுக்குழு, மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான மக்கள் தொடர்பு அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகள் அல்லாத நல்ல நிலையில் உள்ளவர்கள்) உள்ளிட்ட பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

இதனால், இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும், சங்க உறுப்பினர்களும் தவறாது பங்கேற்று புதிய நிர்வாகிகளை நியமனம் குறித்து ஆலோசனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அம்மணாங்கோவில் ஊராட்சி, புதுப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தொடங்கி வைத்து, மாணவ மாணவிகளுடன் காலை உணவு அருந்தினார். அதனைதொடர்ந்து புதுப்பேட்டை அங்கன்வாடி பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் கு.செல்வராசு, திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், பஞ்சாயத்து விஜயகுமாரி, ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.சதிஷ்குமார், ஜோலார்பேட்டை ஒன்றியக் குழுத் தலைவர் சத்யாசதீஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன், மாவட்டக் கவுன்சிலர் ஜெயாசுந்தரேசன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் - தமிழ்நாடு முழுவதும்

# “தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை” நடத்திட “மண்டலப் பொறுப்பாளர்கள்”

**தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு**

கடந்த 13.8.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் “ஐந்து மண்டலத்திலும் தலா ஒரு இடத்தில் அனைவரும் வேறுபாடின்றி நாடும் அறிவுப்பசி மற்றும் வயிற்றுப்பசி ஆகிய இரண்டையும் ஆற்றும் வகையில் கல்வியாளர்களை கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் சமய சார்பற்ற சமூகநீதி செயல்பாடுகள் எனும் தலைப்பில் கருத்தரங்கமும் அதனை தொடர்ந்து சமபந்தி விருந்தும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அனைத்து கழக மாவட்டங்களிலும் “முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள்” எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்” என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கழக மாவட்டங்கள் அடங்கிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் “மண்டலப் பொறுப்பாளர்களாக” நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மண்டலப் பொறுப்பாளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்களை நேரில் சந்தித்து, அவர்களின் ஒத்துழைப்போடு, மண்டல வாரியாக கல்வியாளர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கங்களையும், அத்துடன் ஒவ்வொரு மாவட்டங்களிலும் “முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள்” எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு நிர்வாகிகளுடன் இணைந்து நடத்திட வேண்டுமெனவும், இவ்விரு நிகழ்ச்சிகளிலும் ஆதிதிராவிடர் சமுதாய மக்கள் மற்றும் சிறுபான்மையின மக்களான இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவ பெருமக்களையும் பெருந்திரளாக கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## “மண்டலப் பொறுப்பாளர்கள் விவரம்”

| | | |
|---|---|---|
| சென்னை வடக்கு | தா. இளைய அருணா | ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., (செயலாளர்) சி. தசரதன் (துணைச் செயலாளர்) |
| சென்னை வடகிழக்கு | எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ. | |
| சென்னை கிழக்கு | பி.கே. சேகர்பாபு | |
| சென்னை மேற்கு | நே.சிற்றரசு | |
| சென்னை தென்மேற்கு | மயிலை த. வேலு, எம்.எல்.ஏ., | |
| சென்னை தெற்கு | மா. சுப்பிரமணியன் | |
| திருவள்ளூர் கிழக்கு | டி.ஜெ.கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., | |
| திருவள்ளூர் மத்திய | ஆவடி சா.மு. நாசர் | |
| திருவள்ளூர் மேற்கு | எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., | |
| காஞ்சிபுரம் வடக்கு | தா.மோ. அன்பரசன் | |
| காஞ்சிபுரம் தெற்கு | க.சுந்தர், எம்.எல்.ஏ | |
| இராணிப்பேட்டை | ஆர்.காந்தி | |
| வேலூர் | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ | |
| திருவண்ணாமலை வடக்கு | எம்.எஸ். தரணிவேந்தன் | மருதூர் இராமலிங்கம் செ. புஷ்பராஜ் (இணைச் செயலாளர்கள்) |
| திருவண்ணாமலை தெற்கு | எ.வ. வேலு | |
| விழுப்புரம் வடக்கு | கே. மஸ்தான் | |
| விழுப்புரம் தெற்கு | நா.புகழேந்தி, எம்.எல்.ஏ. | |
| கள்ளக்குறிச்சி வடக்கு | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., | |
| கள்ளக்குறிச்சி தெற்கு | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., | |
| கடலூர் கிழக்கு | எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் | |
| கடலூர் மேற்கு | வெ. கணேசன் | |
| தஞ்சை வடக்கு | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., | |
| தஞ்சை மத்திய | துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ. | |
| தஞ்சை தெற்கு | கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. | |
| மயிலாடுதுறை | நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., | |
| நாகை | என்.கௌதமன் | |
| திருவாரூர் | பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., | |
| திருச்சி வடக்கு | ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. | பி. துரைசாமி, (துணைச் செயலாளர்) |
| திருச்சி தெற்கு | அன்பில் மகேஷ் பொய்யாமொழி | |
| திருச்சி மத்திய | க.வைரமணி | |
| பெரம்பலூர் | குன்னம் சி.ராஜேந்திரன் | |
| அரியலூர் | எஸ்.எஸ். சிவசங்கர் | |
| புதுக்கோட்டை வடக்கு | கே.கே.செல்லப்பாண்டியன் | |
| புதுக்கோட்டை தெற்கு | எஸ். ரகுபதி | |
| சேலம் கிழக்கு | எஸ்.ஆர். சிவலிங்கம் | மா.மதிவேந்தன் (துணைத் தலைவர்) மு. பரமானந்தம் (துணைச் செயலாளர்) |
| சேலம் மேற்கு | டி.எம். செல்வகணபதி | |
| சேலம் மத்திய | ஆ. இராஜேந்திரன், எம்.எல்.ஏ. | |
| நாமக்கல் கிழக்கு | கே.ஆர்.என். இராஜேஸ்குமார், எம்.பி., | |
| நாமக்கல் மேற்கு | எஸ்.எம். மதுரா செந்தில் | |
| திருப்பத்தூர் | க. தேவராஜி, எம்.எல்.ஏ., | சா. இராசேந்திரன் (துணைச் செயலாளர்) |
| தருமபுரி கிழக்கு | தடங்கம் சுப்பிரமணியன் | |
| தருமபுரி மேற்கு | பெ. பழனியப்பன் | |
| கிருஷ்ணகிரி கிழக்கு | தே. மதியழகன், எம்.எல்.ஏ. | |
| கிருஷ்ணகிரி மேற்கு | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ. | |
| கோவை வடக்கு | தொ.பெ. ரவி | திப்பம்பட்டி ஆறுச்சாமி (இணைச் செயலாளர்) |
| கோவை தெற்கு | தளபதி முருகேசன் | |
| கோவை மாநகர் | நா.கார்த்திக் | |
| திருப்பூர் வடக்கு | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., | |
| திருப்பூர் தெற்கு | இல. பத்மநாபன் | |
| ஈரோடு வடக்கு | என். நல்லசிவம் | மு.பொன்தோஸ் (துணைச் செயலாளர்) |
| ஈரோடு தெற்கு | சு. முத்துசாமி | |
| நீலகிரி | பா. மு. முபாரக் | |
| கரூர் | வி.செந்தில் பாலாஜி | |
| மதுரை வடக்கு | பி. மூர்த்தி | வி.பி. இராசன் (இணைச் செயலாளர்) மாரியப்பன் கென்னடி (துணைச் செயலாளர்) |
| மதுரை தெற்கு | மு. மணிமாறன் | |
| மதுரை மாநகர் | கோ. தளபதி, எம்.எல்.ஏ. | |
| திண்டுக்கல் கிழக்கு | இ.பெ. செந்தில்குமார், எம்.எல்.ஏ. | |
| திண்டுக்கல் மேற்கு | அர. சக்கரபாணி, | |
| தேனி வடக்கு | தங்க.தமிழ்ச்செல்வன் | |
| தேனி தெற்கு | கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ. | |
| இராமநாதபுரம் | காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., | |
| சிவகங்கை | கே.ஆர். பெரியகருப்பன் | |
| விருதுநகர் வடக்கு | தங்கம் தென்னரசு | |
| விருதுநகர் தெற்கு | கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் | |
| திருநெல்வேலி கிழக்கு | இரா.ஆவுடையப்பன் | |
| திருநெல்வேலி மத்திய | டி.பி.எம்.மைதீன்கான் | |
| தென்காசி வடக்கு | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., | |
| தென்காசி தெற்கு | ஜெயபாலன் | |
| தூத்துக்குடி வடக்கு | கீதா ஜீவன் | |
| தூத்துக்குடி தெற்கு | அனிதா ராதாகிருஷ்ணன் | |
| கன்னியாகுமரி கிழக்கு | ஆர். மகேஷ் | |
| கன்னியாகுமரி மேற்கு | மனோ தங்கராஜ் | |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள் : 25-08-2023

**ஆ.கிருஷ்ணசாமி** எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மயிலாடுதுறை மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியின் போது - மாரடைப்பால்

# உயிரிழந்த மாணவரின் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 27-

மயிலாடுதுறை மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியின் போது மாரடைப்பால் உயிரிழந்த மாணவரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தனியார் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்று வந்த மாணவன் ரிஷிபாலன் 24.08.2023 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில், மண்டல அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கு இடையிலான 400 மீட்டர் ஓட்டப்பந்தயப் போட்டியில் கலந்து கொண்டு, காட்டுச்சேரி அரசு விளையாட்டு மைதான ஓடுதளத்தில் ஓடிக்கொண்டிருந்த பொழுது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

இந்த துயரமான நேரத்தில், மாணவர் ரிஷிபாலனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: வரலாற்றின் புதிய துவக்கம்!

# தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் திட்டம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

சென்னை, ஆக. 27-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வரலாற்றின் புதிய துவக்கமெனவும் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் திட்டமெனவும் ‘தினகரன்’ நாளேடு 26.8.2023 தேதியிட்ட இதழில் ‘வரலாற்றின் புதிய துவக்கம்’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.


தினகரன்
ஆகஸ்ட் 26, 2023 சனிக்கிழமை
**வரலாற்றின் புதிய துவக்கம்**
தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கடந்த வருடம் செப்டம்பர் 15-ம் தேதி மறைந்த முதலமைச்சர் அண்ணா பிறந்தநாள் அன்று, 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்க பள்ளிகளில் ₹33.56 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ-மாணவிகள் பயனடைந்து வந்தனர். அத்துடன், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர்களின் வருகைப்பதிவும் அதிகரித்துள்ளது. இதையடுத்து, 31,008 அரசு பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள அரசு

அது வருமாறு:-

தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கடந்த வருடம் செப்டம்பர் 15ம் தேதி மறைந்த முதலமைச்சர் அண்ணா பிறந்த நாள் அன்று, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வரும் 1,545 தொடக்க பள்ளிகளில் ரூ.33.56 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1.14 லட்சம் மாணவ-மாணவிகள் பயனடைந்து வந்தனர். அத்துடன், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர்களின் வருகைப்பதிவும் அதிகரித்துள்ளது. இதையடுத்து, 31,008 அரசு பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் இத்திட்டத்தை விரிவுபடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.

இதற்காக, இந்த நிதியாண்டில் ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு, ஒரு குழந்தைக்கு, 50 கிராம் அளவில் ரவை, கோதுமை, அரிசி, சிறுதானியங்கள் போன்றவை 15 கிராம் பருப்பு, உள்ளூரில் கிடைக்கும் காய்கறிகள் வழங்கப்படுகின்றன. சமைத்த உணவு, 100 முதல் 200 கிராம் வரையிலும், 60 கிராம் காய்கறியுடன் கூடிய சாம்பாரும் வழங்கப்படுகிறது. சமைத்த உணவை, பள்ளி மேலாண்மை குழு ருசி பார்த்த பிறகே, மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை, இந்த திட்டத்தின்கீழ், காலையில் உப்புமா, ரவா கிச்சடி, ரவா கேசரி, காய்கறி சாம்பார் உள்ளிட்ட பல்வேறு வகை உணவுகள் மாணவமாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது இதில் கூடுதல் உணவு வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அனைத்து குழந்தைகளுக்கும் காலை 8 மணி முதல் 8.50 மணிக்குள் சிற்றுண்டி வழங்கவேண்டும், கலப்படமின்றி உணவு சமைக்கப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் மீண்டும் பயன்படுத்தக்கூடாது, உணவு வழங்கும் முன், பள்ளி மேலாண்மை குழுவினர் அதை உண்டு பார்த்து, பின்னர் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்று ஏற்கனவே அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே உத்தரவு தற்போதும் தொடர்கிறது. தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ள இந்த காலை உணவு திட்டத்தின் மூலம், 18 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள்.

மறைந்த முதல்வர் கலைஞர் பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய பள்ளியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் இத்திட்டத்தை நேற்று தொடங்கி வைத்தார். அவர், 25 பள்ளி குழந்தைகளுடன் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டார். உணவின் சுவை குறித்து மாணவ, மாணவிகளிடம் விசாரித்துக் கொண்டே முதல்வர் சாப்பிட்டார். உணவு எப்படி இருந்தது என்பது குறித்து சிறுவர் சிறுமிகளும், கூச்சப்படாமல் முதல்வருடன் பேசிக்கொண்டே உணவருந்தினர். சிறுவர், சிறுமிகளின் பேச்சைக்கேட்டு முதல்வர் மனம் மகிழ்ந்தார். முதல்வருடன் அமர்ந்து உணவருந்திய மாணவர்களும் பூரித்துப்போயினர்.

மாணவ, மாணவிகள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாக கொண்டு இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. “திருக்குவளையின் நேற்றைய நிகழ்ச்சி வரலாற்றின் புதிய துவக்கம்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுவே, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உச்சரிக்கப்படும் ஒற்றை வரி ஆகும்.


இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் ஒன்றியத்துக்கு உட்பட்ட பொம்மிகுப்பம் ஊராட்சி, ஏழருவி பகுதி மக்கள் பயன் அடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ரேசன் கடையை மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் தலைமையில் நல்லதம்பி எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். இதில் கூட்டுறவு சார் பதிவாளர்கள் தர்மேந்திரன். கோபிநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் எம்.ஜி.காந்தி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அருணாச்சலம், ஒன்றிய அவைத் தலைவர் சின்னதம்பி, மாவட்ட பிரதிநிதி எம்.ராஜேந்திரன் மற்றும் சரவணன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜெயகோபி, மாவட்ட ஆவின் பால் இயக்குனர் சின்னபையன், ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் எஸ்.சி.விஜயகுமார் மற்றும் ரகு சாமுவேல், தமிழரசன், ஞானவேல், சாமன்னன், விஜயரங்கன், அண்ணாமலை நாகரத்தினம், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கற்கோவில் இரா. இராமதாசு**
**ஆகஸ்ட் 27 (2017)**



**இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

# நாளேடுகளின் பாராட்டு!

THE HINDU

From Page One

## CM launches expansion of breakfast scheme



Chief Minister M.K. Stalin having breakfast with students at Thirukkuvalai in Nagapattinam district on Friday.

THE TIMES OF INDIA

TIMES CITY

## Dravida model giving life to kids: CM

### Launches Breakfast Scheme Extension

Times News Network



17 LAKH CHILDREN BENEFITED: CM M K Stalin inaugurated the extension of the chief minister's breakfast scheme at a government middle school in Thirukkuvalai on Friday

Nagapattinam: Chief minister M K Stalin on Friday said the breakfast scheme was the most important of his dravida model government, which now benefited 17 lakh children of Classes I to V in 31,000 government schools across the state.

He was speaking after inaugurating the extension of the scheme at the government middle school at Thirukkuvalai, where his father M Karunanidhi studied.

Stalin later had breakfast with the students.

"Though I have implemented many schemes for the benefit of the people, this breakfast scheme gives me immense satisfaction. There is a saying that 'undi koduthor uyir koduthor' in Tamil, which means 'one who gives food is a giver of life'. So, our dravida model government is giving life to our children," he said.

"The money spent is an investment for the better future of our children. This investment will return in the form of knowledge and skill that will build our country," Stalin said.

The chief minister launched the scheme on September 15, 2022, in Madurai. The first phase covered 1.14 lakh children in 1,545 corporation, municipality and panchayat schools. As many as 1.54 lakh students in 1,968 schools were brought under the scheme from February 28.

Taking a dig at governor R N Ravi, the CM said, "The DMK government is running a social justice regime that gives everything to everyone. But there are a few people who put barriers to our principles in the name of NEP 2020 and NEET. In those days, the Ekalavya offered his thumb (to Dronacharya). Times have changed. It is not the time of Dronacharyas but of Ekalavyas," he stated.

In Chennai, youth welfare minister Udhayanidhi Stalin said attendance of students had increased by 30% to 40% following the scheme's launch last year.

He had food along with students at a school in Triplicane. HR & CE minister P K Sekar Babu and health minister Ma Subramanian launched the scheme in their constituencies while in Trichy, minister K N Nehru launched the scheme. In Madurai, commercial taxes minister P Moorthy inaugurated the scheme at Chinnapatti panchayat union primary school.

Information technology minister Palanivel Thiaga Rajan, accompanied by mayor V Indrani Ponvasanth and others, had food with students at Muthupatti Government Kallar High School.

THE NEW INDIAN EXPRESS



Chief Minister M K Stalin enjoys breakfast with students of Panchayat Union Middle School in Thirukkuvalai on Friday

## STALIN EXTENDS BREAKFAST SCHEME TO ALL TN SCHOOLS

EXPRESS NEWS SERVICE @ Nagapattinam

CHIEF MINISTER M K Stalin on Friday inaugurated the expanded breakfast scheme for primary schoolchildren across the state at the Panchayat Union Middle School in Thirukkuvalai in Nagapattinam. About 17 lakh students in 31,008 state-run primary schools would benefit

where his father and former CM M Karunanidhi had studied. The CM expressed happiness about the expanded scheme being rolled out from his ancestral village.

Recalling his interaction with students during a school visit in Chennai last year where they said they have not had breakfast at home, the CM said, "A person needs to have a full stomach and has to eat three times to think and work. Breakfast is crucial. How can students focus on studies without having their breakfast? I thought students should not be educated without providing them food. We then initiated the breakfast scheme."

The CM credited P T Thiyagarayar and his predeces-

தலையங்கம்

தினத்தந்தி

26.8.2023 (சனிக்கிழமை)

## பசிப்பிணியை போக்கும் காலை உணவு திட்டம்!





DECCAN Chronicle

SCHOOL B'FAST SCHEME

## Model scheme from land of social justice

G BABU JAYAKUMAR | DC
CHENNAI, AUG. 25



Chief Minister MK Stalin enjoys breakfast with school children at Tirukavalai in Nagai district Friday. — DC

The expansion of the Chief Minister's Breakfast Scheme to schools all over the State on Friday is undoubtedly a model development scheme for the entire country to follow since it basically addresses the problem of hunger, about which even the United Nations is concerned about and has set 2030 as the target year for creating a world free of hunger.

Though Tamil Nadu ranks higher than most of the States in the country on various development indices, including hunger, Chief Minister M K Stalin latest attempt at eradicating malnutrition among school going children is a commendable measure for it would go a long way in ensuring not only a healthy State but also an educated society.

For poverty breeds illiteracy as hungry children cannot concentrate on their studies in classrooms. So by providing breakfast to children studying in Classes one to five in government schools, the Chief Minister has minimised the possibility of students dropping out of school. Otherwise, unable to bear the pangs of hunger, children just drifted away from education ■ P7

தினகரன்

Dinakaran

நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு முழுவதும்

## 31,000 அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம்

■ திருக்குவளையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார் ■ 17 லட்சம் மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்



தினமணி

## காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

திருக்குவளையில் முதல்வர் தொடங்கி வைத்தார்



தினத்தந்தி

## 17 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்

### திருக்குவளையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்

தமிழ்நாட்டில் அனைத்து அரசு பள்ளிக்கூடங்களிலும் காலை உணவு விரிவாக்க திட்டத்தை கருணாநிதி பிறந்த திருக்குவளையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் மூலம் 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் அடைவார்கள்.



தினகரன்

ஆகஸ்ட் 26, 2023 சனிக்கிழமை

## வரலாற்றின் புதிய துவக்கம்

இந்து தமிழ் திசை

17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில்

## காலை உணவு திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாக்கம்

● திருக்குவளையில் தொடங்கிவைத்த முதல்வர் ஸ்டாலின், கல்வி கற்க எதுவும் தடையாக இருக்க கூடாது என்றார்.



# கலைஞரும் நானும்

33

“அரசியல், சினிமா என எல்லாத் துறைகளிலும் உச்சம் தொட்ட கலைஞர், அணுகுவதற்கு எளிமையானவராக இருந்தார். அந்த முரண் ஆச்சரியமானது. அவரைக் கொண்டாடுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு காரணத்தை அளித்திருப்பதுதான் கலைஞர் என்கிற ஆளுமையின் சிறப்பு” எனத் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் நடிகர் நாசர்.

■ **நாசர்,** நடிகர்



## எழுதியதையா திரும்ப எழுதமுடியும்?

“கலைஞர் அவர்களின் ஐந்து படைப்புகளில் இடம்பெற்றிருக்கிறேன் என்பதே எனக்குப் பெருமைதான். முதன்முதலில் அவரின் **‘நியாயத்தராசு’** படத்தில் இடம்பெற்றேன். அந்தப் படத்தின் வசனங்கள் எல்லாம், ‘ஷார்ட்’ ஆக ஒரு சில வரிகளில் இருக்கும். 1950 – 60-களில் வசனங்களில் புரட்சி ஏற்படுத்தியவர், இயக்குநருக்கு ஏற்ப ‘ஷார்ட்’ ஆன வசனங்கள் படைத்தது வியப்பளிக்கும். அந்தப் படத்துக்காகப் படக்குழு அனைவரும் அவரைச் சென்று சந்தித்தோம். முதன்முறையாக அவரை நேரில் பார்க்கையில், எனக்கு இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

### கற்றுக்கொள்ள வேண்டிய அர்ப்பணிப்பு

கலைஞரும் படப்பிடிப்புக்கு அவ்வப்போது வருவார். எழுதிக்கொடுத்துவிட்டு, எப்படியாவது எடுத்துக் கொள்ளுங்கள் என இருக்கமாட்டார். எழுத்துக்கு என தினமும் நேரம் ஒதுக்குவதைப்போல, எழுதியவை சரியாக வருகிறதா எனப் பார்ப்பதும் கலைஞரின் வழக்கம். எடிட்டிங் அறைகளுக்கு வந்து காட்சிகளைப் பார்த்து கரெக்ஷன் சொல்வதையும் கவனித்திருக்கிறேன்.

எடுத்துக்கொண்ட பணிக்காக நேரமோ, காலமோ, புயல், மழை என எந்தத் தடங்கலையும் காட்டிக் கொண்டதில்லை. அந்த ’டெடிகேஷனில்’ கொஞ்சமாவது நான் கற்றுக்கொள்ள வேண்டும் என நினைத்திருக்கிறேன்.



அதன்பின்னர் **‘பாசப்பறவைகள்’, ‘பொன்னர் சங்கர்’, ‘இளைஞன்’** என அவரது படங்களில் நான் நடித்திருக்கிறேன். எனக்கு முக்கியமாகவும், நெகிழ்வாகவும் இருந்தது அவரின் **‘தென்பாண்டிச் சிங்கம்’** நாவல் தொலைக்காட்சித் தொடராக எடுக்கப்பட்டபோது, அதன் பிரதான கதாபாத்திரமாக நான் நடித்ததுதான்.

அந்தப் பாத்திரத்துக்கு யார் கிடைக்கிறார்களோ அவர்களைப் பயன்படுத்தலாம் என அவர் நினைக்கவில்லை. அந்த எழுத்தை, அந்தப் பாத்திரத்தைச் சுமக்கும் அளவுக்குத் திறன் கொண்டவர் யாராக இருக்கலாம் என அவர் யோசித்திருப்பார். அப்போது என் பெயரைத் தேர்வு செய்தது, நான் பெருமைப்பட்ட தருணமாக இருந்தது. அவரது முக்கியமான புதினம் ஒன்றை என் தோள்களில் வைக்கிறாரே என்கிற கடமை உணர்ச்சியும் எனக்கு அதிகரித்தது. நடிகனாக நான் பெருமையை உணர்ந்த நாட்கள் அவை.

### கருத்து சரியாக இருந்தால் போதும்

அந்தத் தொடரில் நடிப்பதற்காக அவரை நேரில் சந்தித்தேன். அந்த நாவலின் இரண்டு பிரதிகளை வாங்கி, ஒன்றை வீட்டிலும், ஒன்றை என் கைகளிலும் வைத்துக்கொண்டேன். அதேநேரத்தில் கலைஞர் அவர்களும் அவரது கையெழுத்திட்டு ஒரு பிரதி அளித்தார். படப்பிடிப்பின்போது சில காட்சிகளை நினைவுபடுத்தி அது குறித்து எனது யோசனைகளைக் கேட்பார்.

அவரது வசனத்தை அப்படியே பேசவேண்டும் என கலைஞர் எதிர்பார்ப்பார் எனச் சிலர் கூறி இருந்தனர். ஆனால், அப்படியெல்லாம் இல்லை என்பதை அவரது படைப்புகளில் நடிக்கும் போது உணர்ந்து கொண்டேன். ஒருமுறை அவரது வசனத்தில், எனக்கு வசதியாக சில வார்த்தைகள் வந்து விழுகின்றன. நான் அதைப் போட்டுக்கொள்ளலாமா எனக் கேட்டேன். “யாருய்யா சொன்னா, அப்படியே வரணும்னு, கருத்து சரியா வந்தா போட்டுக்க” என்றார். படைப்பாளியாகவும் கலைஞர் மிகவும் இலகுவானவர், எந்த இடைவெளிகளையும் வைத்துக் கொண்டதில்லை.

### அனைவரையும் சமமாக நடத்தியவர்

அவரைச் சந்திப்பதற்குப் பொதுவாகவே பெரிய கெடுபிடிகள் இருக்காது என்றாலும், திரைத்துறையினர் எனில், உடனே அனுமதி கிடைத்துவிடும். தனிப்பட்ட முறையிலோ, திரைத்துறை சார்பாகவோ செல்கையில் எங்களோடு உளமாரப் பேசி மகிழ்வார். அவரது திரைத்துறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார். அரசியல் பணி, ஆட்சிப் பணிகளுக்கு இடையில், திரைத்துறைப் பணியும், திரைத்துறையினர் சந்திப்பும் அவருக்கு ஆசுவாசம் அளிப்பவையாக இருந்தன. எல்லோரையும் சமமாக மதித்துப் பேசி கருத்துகளைக் கேட்டுக் கொள்வார். அந்தப் பாங்கு கலைஞரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

எனது தமிழ் உச்சரிப்பு அவருக்குப் பிடிக்கும். அதுகுறித்து ஒருமுறை கேட்டார். “நீ நல்லா தமிழ் பேசுறியே, எந்த ஸ்கூல்ல படிச்ச? யார் உன் தமிழ் ஆசிரியர்?” என விசாரித்தார். “அய்யா... பள்ளிக்கூடத்தில் எல்லாம் இந்த அளவுக்குப் பழகவில்லை. உங்க எழுத்து, வசனங்களைக் கேட்டுப் பழகியது” என விளக்கினேன். எங்க அப்பா தீவிரமான காங்கிரஸ்காரர் என்றாலும், அண்ணாவின் பேச்சிலும், கலைஞரின் எழுத்திலும் ஈடுபாடு கொண்டவர். அதனால், என் சிறுவயதில் செங்கல்பட்டில் நடக்கும் தி.மு.க. கூட்டங்களுக்கு அழைத்துச் சென்று பேச்சுகளைக் கேட்க வைத்துள்ளார். **‘முரசொலி’ தலையங்கம், கலைஞர் கடிதங்களை** வாய்விட்டுப் படிக்க வேண்டும் என்பது சிறுவயது பயிற்சியாக இருந்தது. இதை அவரிடம் பகிர்ந்துகொண்டபோது, ஆர்வமுடன் கேட்டுக் கொண்டார்.

**அவரை உள்வாங்கி நடித்தவன் என்கிற முறையில், கலைஞருடன் நான் எப்போதும் பயணிக்கிறேன் என்றால், அது மிகையில்லை.**

எனது நடிப்பு தொடர்பாகவும் நிறைய பாராட்டி இருக்கிறார். அவரது படங்களில் நடித்தது மட்டுமல்ல, எனது மற்ற படங்களின்போதும் பாராட்டி இருக்கிறார்.

### உரையாடலுக்கான இடத்தை உருவாக்கியவர்

எனது நடிப்பு தொடர்பாக அவரோடு ஓர் உரையாடலும் நடந்துள்ளது. நான் நடிப்பது புதிதாக இருக்கிறதே எனக் கேட்டதுடன், “எங்க கத்துகிட்ட...? நாடகப் பின்புலம் இருக்கா...?” எனக் கேட்டார். “ஆமாங்கய்யா... நாடக பின்புலம் உண்டு. அதுவும் சமகாலப் பரீட்சார்த்த நாடகங்களில் நடித்த பயிற்சி உள்ளது” என்றேன். “அது என்னய்யா பரீட்சார்த்த நாடகம், ஒவ்வொரு நாடகமும் பரீட்சார்த்தம்தானே... எழுதியதையா திரும்ப எழுதமுடியும்?” எனக்கேட்டார். “அய்யா, சில மேலை நாட்டுக் கோட்பாடுகள் வந்திருக்கு, அதன்படி சில உத்திகளோட இந்த நாடகங்களைச் செய்கிறோம்” என விளக்கினேன். “வசனங்களே இல்லாத நாடகங்கள்கூடச் செய்ய முடியும்” என்றேன். “அது எப்படி வசனமே இல்லாத நாடகம் செய்ய முடியும்?” எனக்கேட்டார். இப்படி அவரோடு நீண்ட உரையாடலாக அது அமைந்தது.

புதிய ஒரு போக்கினைத் தெரிந்துகொள்வதற்கு ஏற்ப உரையாடலுக்கான இடத்தை உருவாக்கிக் கொடுப்பது என்கிற அந்தப் பண்பு மிக உச்சமாக இருந்தது.

நாடகங்களில் எல்லா எல்லைகளையும் கடந்தவர் என்று அவரால் சொல்லிக் கொள்ள முடியும். அப்படியான பணிகளைச் செய்தவர் அவர். ஆனால், நாடகத்தில் புதிய அணுகுமுறை குறித்துக் கேட்டு அறிவதும், ஏன் அப்படிச் செய்ய வேண்டும் எனத் தெரிந்துகொள்வதற்கான ஆர்வமும் வியப்புதான். அவர் கேட்டுத்தெரிந்து கொள்வதைவிட, என்னைப் பேசவிடுவது என்பதே பெரிய விஷயம்தானே... அப்படிப் பல வியப்புகளை அளித்தவர் கலைஞர்.

### வழிநடத்தும் வாழ்த்து!

1989 -ஆம் ஆண்டு எனது திருமணத்தின்போது, அவருக்கு அழைப்பிதழ் அளித்துவந்தேன். கலைஞர் வருவார் என்கிற எதிர்பார்ப்பு எல்லாம் இல்லை. ஆனால், திருமண நாளில் ஒரு காவல் அதிகாரி வந்து, கலைஞர் வர உள்ளார் என சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார்.

முதல்வராகப் பொறுப்பேற்று கலந்துகொண்ட முதல் பொதுநிகழ்ச்சியாக எனது திருமணம் இருந்தது. அவரது வாழ்த்தும், வழிகாட்டுதலும், எனது நடிப்பின்மீது அவர் வைத்த நம்பிக்கையும் என்றென்றைக்கும் வழிநடத்தும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

அவரை உள்வாங்கி நடித்தவன் என்கிற முறையில், கலைஞருடன் நான் எப்போதும் பயணிக்கிறேன் என்றால், அது மிகையில்லை.

...பகிர்வார்கள்

## சனாதன ஒழிப்பு மாநாடு!




மக்கள் ஒருவரையொருவர் சமமற்ற விதமாக நடத்துவதே சனாதன தர்மம். உயர்வு – தாழ்வு, புனிதம் – தீட்டு எனும் கற்பிதங்கள் வழியே மக்களை கூறுபோட்டு வைத்துள்ளது. அதை அகற்றும் பெரும்பணியில்தான், பல சமூகநீதி, சமதர்ம இயக்கங்களும் ஓரணியில் நின்றன, நிற்கின்றன.

சனாதனத்தின் நச்சுக் கருத்துகள் சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்டாலும், அதை அகற்ற வேண்டியது தொடர் பணி என்பதுடன், பல மட்டங்களிலும், பல திசைகளிலும் அந்த வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படியான பணியைக் கையில் எடுத்துள்ளது, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம். செப்.2-ஆம் தேதி, சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற உள்ள சனாதன ஒழிப்பு மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்பட முக்கிய ஆளுமைகள் பலர் பங்குபெற உள்ளனர். அரசியல் அரங்கிலும், மக்கள் மனதிலும் சனாதனத்தை அப்புறப்படுத்த வேண்டிய காலத்தில், இது அவசியமான பணி.

## ஃப்ளாஷ்பேக்



### கர்நாடகத்தில் கலைஞர்!

கடந்த 58 ஆண்டுகளுக்கு முன் பெங்களூருவில் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள அன்றைய கழகப் பொருளாளர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். பெங்களூரில் நடைபெறவிருந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்கவிருந்த 25 கழகத் தொண்டர்களின் பெயர்ப் பட்டியலை அந்தப் பொதுக்கூட்டத்தில் தலைவர் அறிவித்தார். அப்போது ‘குமரகிருபா’ அரசு விருந்தினர் மாளிகையில் தங்கி இருந்த கலைஞர் அவர்களை, நானும் முன்னாள் பெங்களூரு பாரதி நகர் சட்டப்பேரவை உறுப்பினரும், அப்போது கழக மாநில அமைப்பாளருமான திராவிடமணி அவர்களோடு சென்று வரவேற்றேன். எங்களுடன் கர்நாடக மாநில அவைத்தலைவர் எம்.வேணுகோபால், பொருளாளர் விட்டல், கழக மூத்த உறுப்பினர்கள் மா.மன்னர், வே.இளஞ்சேரன், நடேசன் ஆகியோரும் இருந்தனர். இந்த மகிழ்ச்சியான தருணத்தை நான் நெகிழ்ச்சியுடன் நினைவு கூருகிறேன்.


இராமசாமி

**–ந.இராமசாமி, மாநில தி.மு.க. அமைப்பாளர், கர்நாடகா.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கச்சத்தீவு!

**1974-ஆம் ஆண்டு, இலங்கை அரசும், இந்திய அரசும் கச்சத்தீவு தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்டன. அப்போது கலைஞர் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் நாட்டின் நலனுக்கும், மீனவர் வாழ்வுக்கும் ஆபத்து ஏற்படுத்தும் என எதிர்த்தார். நாடாளுமன்றத்தில் இருந்த தமிழ்நாட்டு உறுப்பினர்கள் இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், எதிர்காலத்தில் யுத்த ஆபத்து உருவாகும் என எச்சரிக்கை செய்தனர். கச்சத்தீவு ஒப்பந்தத்தில் அப்போது வழங்கப்பட்ட சில உரிமைகள்கூட கழக அரசு கலைக்கப்பட்டதும் பறிக்கப்பட்டன. அப்போது செய்யப்பட்ட ஒப்பந்தம் குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கும் சொல்லப்படவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 222




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131